உ


சிவமயம்

# சைவநீதி

SAIVANEETHI



மலர் 22 | விளம்பி சித்திரை - ஆனி | 2018 April. - June | இதழ் 1,2,3



இவ்விதழ் வெளிவர அனுசரணை
திரு. திருமதி. நடராசா

# பன்னிரு திருமுறை முற்றோதல்

ஸ்ரீ வடிவாம்பாள் சமேத முன்னைநாதர் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம். 19 ~ 28.04.2018 வரை





## பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. பன்னிரு திருமுறை முற்றோதல் | ~ | ~ | ~ | 02 |
| 2. பஞ்சபூத உற்பத்தி | ~ | ~ | ~ | 04 |
| 3. கந்தபுராணம் (நன்றி மறப்பதால் வரும் கேடு) | | | ~ | 06 |
| 4. பெண்ணடியார் திறம் | ~ | ~ | ~ | 10 |
| 5. விறன்மிண்ட நாயனார் | ~ | ~ | ~ | 13 |
| 6. சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலரின் பங்கு | | | ~ | 16 |
| 7. இரு ராசாக்கள் | ~ | ~ | ~ | 19 |
| 8. அஞ்சலி | ~ | ~ | ~ | 20 |
| 9. இசையை விளக்கிட இயல்பினில் நின்றேத்தி | | | ~ | 21 |
| 10.திருக்குறட் கதை (கடன்) | ~ | ~ | ~ | 24 |
| 11.யாப்பிலக்கணம் வினா, விடை | ~ | ~ | ~ | 26 |
| 12.அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம் | ~ | | ~ | 31 |
| 13.சைவசமயம் வினா, விடை | ~ | ~ | ~ | 36 |

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் ௨௨ வி எம்பி சித்திரை, வைகாசி, ஆனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் 1,2,3.

**தொடக்குனர்:**
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
**திரு. வ. செல்லையா**

**ஆலோசகர்**
கலாபூஷணம்,
சைவப்புலவர்
**திரு. சு. செல்லத்துரை**

**ஆசிரியர்**
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
**திரு. செ. நவநீதகுமார் M.A.**

**விநியோகம்**
சித்தாந்தரத்தினம்
**திருமதி. பத்மினி ராஜேந்திரா**

**வெளியிடுவோர்**
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

## ஆடிமாதச் சிறப்புக்கள்

"வாடிவரும் மனம் தண்மையாக மழை பொழிவாய்
கொடி மார்த்தாண்ட சமசோதி வீசும் குளிர்நிலவே
பாடிவந்தேன் இன்னும் பாடுகின்றேன் எங்கள் பாக்தியத்தால்
ஆடியில் ஆடிவருவாய் சிவன் கொஞ்சும் அஞ்சுகமே"

- அகத்தியர்

தை முதல் ஆனிவரையிலான ஆறுமாதகாலம் சூரியன் வடக்கில் சஞ்சரிக்கும் உத்தராயணம் எனவும், ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறுமாதகாலம் சூரியன் தெற்கில் சஞ்சரிக்கும் தட்சணாயணம் எனவும் கொள்ளப்படும். தட்சணாய காலங்களில் தென்னிந்தியா இலங்கை போன்ற இடங்களில் ஆலய உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்றுவருகின்றன. ஆடிமாதம் மங்கல காரியங்களுக்கு விலக்களிக்கப்பட்ட காலமாக இருந்த போதிலும் ஆடிப்பிறப்பு, ஆடிப்பெருக்கு, ஆடிஅமாவாசை, ஆடிச்செவ்வாய், ஆடிப்பூரம், ஆடிக்கிருத்திகை, ஆடிச் சுவாதி போன்ற விசேடங்கள் நிறைந்தமாதமாக ஆடிமாதம் சிறப்புப் பெறுகிறது.

**ஆடிப்பிறப்பு:-** ஆடிமாதம் முதலாம் திகதி பிறக்கும் ஆடிப்பிறப்பை சிறுவர்கள் குதூகலமாகக் கொண்டாடுவர்

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே
கூடிப்பனங்கட்டி கூழும் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே".

என்று தங்கத்தாத்தா சோமசுந்தரப் புலவர் போற்றிப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**ஆடிப்பெருக்கு:-** ஆடித்திங்களில் முதன்முதலாக ஆறுகள் பெருகிவருவதை மக்கள் களிப்புடன் வரவேற்றுக் கொண்டாடும் விழா ஆடிப்அபெருக்காகும். ஆடி மாதத்தின் 18ஆம் நாளில் இவ்விழா கொண்டாடப்பட்டுவருவதால் **ஆடிப்பதினெட்டு** அல்லது **பதினெட்டாம் பெருக்கு** என்று கூறப்படும். இது பழந்தமிழ் இலக்கியங்கள் கூறும் **புனலாடல்** விழாவுடன் தொடர்புடையது எனக் கூறலாம். இந்நாளில் பிதிர்கள் வருவதாகக் கருதப்பட்டு, அவர்களை வரவேற்று, அவர்கள் விரும்பும் உணவு படைத்து மகிழ்விக்கும் நிகழ்வு இன்றும் பல வீடுகளில் நடைபெற்றுவருவதைக் காணலாம்.

**ஆடிஅமாவாசை:-** அடிமாதத்தில் கடகராசியில் சஞ்சரிக்கும் சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வந்து, சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் சந்திரன் நிற்கும் தினமே ஆடிஅமாவாசையாகும். தந்தையை இழந்தவர்கள் ஆசாரசீலராக உபவாசம் இருந்து, விரதம் அனுட்டித்து, புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறப் பிதிர்த் தர்ப்பணம் செய்வர். அந்தணர்களுக்கும், ஏழைகளுக்கும் தானம் செய்வர். ஆதரவற்றவர்கள், விருந்தினர்கள், சுற்றத்தார்களுடன் தாமும் உணவருந்தும் விருந்தோம்பலுக்கும் இந்நாள் சிறந்த நாளாகும்.

**ஆடிச்செவ்வாய்:-** இந்நாள் அம்பாள் தரிசனத்திற்கு மிகவும் உகந்தது. கன்னிப்பெண்கள் இத்தினத்தில் விரதமிருந்து அம்பாள் தரிசனத்தில் ஈடுபடுவதன் மூலம் மாங்கலிய பாக்கியம் கிடைக்கப் பெறுவர். செவ்வாய் தோஷம் உள்ளவர்களும், ஏனையோரும் இந்நாளில் கோயிலில் சங்கற்பம் செய்து, ஒரு பொழுது அன்னமோ, பால்பழமோ உண்டு இவ்விரதத்தை மேற்கொள்ளலாம்.

**ஆடிப்பூரம்:-** சிவபெருமானுக்குத் திருவாதிரையும், திருமாலுக்குத் திருவோணமும் உன்னதமானவை போல அம்பிகைக்குரிய சிறப்புத்திருநாள் ஆடிப்பூரமாகும். உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவான தினமாகவும் பெரியோர் இத்தினத்தைக் குறிப்பிடுவர். அம்பாள் விரதத்திற்கும், தரிசனத்திற்கும் ஏற்ற நாளாகவும் இது உள்ளது. அம்பாள் தரும் எட்டுவகைச் சித்திகளைப் பெறவும் இந்நாள் உகந்தது.

**ஆடிக்கிருத்திகை(கார்த்திகை):-** தென்னாட்டுத் தமிழ்க் கடவுளாகிய முருகப்பெருமானுக்கு ஆடிக்கிருத்திகை தனிப்பெருஞ் சிறப்புடையதாகும். ஆறு குழந்தைகளாகிய முருகப்பெருமானுக்குக் கார்த்திகைப்பெண்கள் அறுவரும் பாலூட்டி வளர்த்த தினமாகவும் இந்நாள் கொள்ளப்படுகிறது.

**ஆடிச்சுவாதி (சோதி):-** "முதிய நல்லாடிதன்னில் சுத்தமாம் சுவாதிநாளில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்" என்று உமாபதிசிவாசாரியார் கூறியபடி, சுந்தரர், சேரமான்பெருமாள், பரவையார், சங்கிலியார் ஆகியோர் இவ்வாடிச் சுவாதியில் கயிலை சேர்ந்து சிவபெருமானை வணங்கி இன்புற்றிருந்தமை காரணமாக இவ்வாடிச் சுவாதி சிறப்புப் பெறுகிறது.

இவ்வாறு ஆடிமாதம் பல உயரிய நிகழ்வுகளைக் கொண்டு விளங்குவதால் சிறப்பான மாதமாகப் பெருமை பெறுகிறது.

**"ஆடிப்பட்டம் தேடி விதை."**

**"ஆடிப்பனம்பழம் தேடிப்பொறுக்கு."**

உ
சிவமயம்

# முன்னநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருமுறை முற்றோதல்

திருமுறைநெறிச்செல்வர் ந. சிவபாலகணேசன் M.A.

ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாதசுவாமி தென் இலங்கையில் சிலாப நகருக்குக் கிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில், கோயில் கொண்டெழுந்தருளியிருந்து உயிர்களுக்கு விசேட சாந்நித்தியம் கிடைக்கும் வகையில் அருள் புரிந்து வருவது காணக்கூடியதாகும். இக்கோயிலின் மூலஸ்தானத்தில் ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அமைந்திருப்பதும், இத்தலத்தில் காணக்கூடிய ஒரு விசேட அம்சமாகும். அத்துடன் மகாமேரு, ஸ்ரீ சக்கரம் என்பனவும் மூலஸ்தானத்தில் இருப்பதும் மிக விசேடமானதேயாகும். மேலும் இக்கோயில் 64 ஸ்ரீ தேவி பீடங்களில் ஒன்றாக விளங்குவதும் சிறப்பம்சங்களில் குறிப்பிடக்கூடிய ஒரு செய்தியேயாகும். காலத்தால் மிக முற்பட்ட இக்கோயிலில் இராமர் வழிபட்ட செய்தியுமுண்டு. அதேபோல மகாபாரதம் இயற்றிய வியாசமுனிவர், வழிபட்ட செய்தியுமுளது. இங்கு ஆறுகால நித்திய பூசைகள் விதிமுறை தவறாமல் நடந்து வருவது காணக்கூடியதாகும். சூரியோதயத்தின்முன்பு 5.30 மணியளவில் உஷத்கால பூசை நடைபெறுவது வழக்கம். அதைத் தொடர்ந்து காலை 7.30 மணியளவில் காலைச் சந்திப்பூசை இடம் பெறும். மேற்கொண்டு நடுப்பகலில் உச்சிக்காலப் பூசை நடைபெற்று வருவதும், மாலையில் சாயரட்சைப் பூசை நடைபெறுவதும், இரவு 7.30 மணியளவில் இரண்டாம் காலப்பூசை இடம்பெற்று, இரவு 8.30 மணியளவில் அர்த்தசாமப் பூசையும் நடைபெற்ற பின்பு கதவுகள் சாத்தப்படும் வழக்கம் உள்ளது.

அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பதற்கிணங்க, முன்னநாதசுவாமி தேவஸ்தான ஆதீனகர்த்தாவான பிரம்மஸ்ரீ ச. பத்மநாபஐயா அவர்கள், திருவாவடுதுறை திருமுறைப் பயிற்சிமையம் - கொழும்பின் அமைப்பாளரான சைவப்புலவர், சித்தாந்தச்செம்மணி செ. நவநீதகுமார் M.A. அவர்களை முன்னநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருவாசக முற்றோதல், திருமுறை முற்றோதல்கள் நடாத்தப்பட வேண்டுமென கேட்டுக்கொண்டார். அதன்படி 06.01.2018இல் திருவாசக முற்றோதல் திருமதி. பத்மினி இராசேந்திரா அவர்களது ஏற்பாட்டில் ஏறக்குறைய 35 சிவனடியார்களுடன் நடைபெற்றது. இதற்குப் பொறுப்பாளர்களாக திருமதி. ஹம்ஸாநந்தி தர்மபாலனும், திரு. ந. சிவபாலகணேசனும் இருந்து கடமையாற்றினார்கள். அதைத் தொடர்ந்து பன்னிருதிருமுறை முற்றோதல் 19.04.2018 முதல் 28.04.2018 வரை நடாத்தப்படுவதற்கு அமைப்பாளரும், தலைவருமான திரு செ. நவநீதகுமார் அவர்களால் தங்குமிடவசதி, உணவு, தேநீர் முதலியன ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அவ்வேளையில் 19.04.2018 அன்று காலை 6.00மணியளவில் திருமுறை முற்றோதல் செய்யும் குழுவினர் தலைவர் தலைமைதாங்கப் புறப்பட்டுச் சென்று 9.30 மணியளவில் கோவிலை சென்றடைந்து வழிபாடாற்றிய பின் 10.00 மணியளவில் திருமுறை முற்றோதல் ஆரம்பிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ பத்மநாபஐயா அவர்களது தீபாராதனையுடனும், தலைவர் செ. நவநீதகுமார் அவர்களது திருமுறை ஓதலுடனும் தொடங்கிய அன்றைய தின முற்றோதல் மாலை சாயரட்சை இரண்டாம் காலப்பூசை 7.30 மணியளவில் காப்புச்சொல்லி நிறைவு

செய்யப்பட்டது. அடுத்தநாள் காலை 5.30மணி உஷத்கால பூசையுடன் முற்றோதல் காப்புச் சொல்லி ஆரம்பிக்கப்பட்டு இரவு 7.30 மணிவரை தொடர்ந்து செய்தபின் காப்புச் சொல்லி நிறைவுசெய்யப்பட்டது. இவ்விதமாக 27.04.2018 வரை திருமுறை முற்றோதல் செய்யப்பெற்று, 28.04.2018 அன்று திருமுறை முற்றோதல் பூர்த்தி செய்யப்பட்டது. அதில்; பிரம்மஸ்ரீ பத்மநாபஐயா அவர்களது தீபாராதனை இடம்பெற்று; முற்றோதல் குழுவினருக்கு விபூதிப் பிரசாதம், காளாஞ்சி, உருத்திராக்கமாலை, உத்தரீயம் என்பன வழங்கப் பெற்றன. அதைத்தொடர்ந்து ஐயாவின் தலைமையில் 12 திருமுறைகள்,

முதலாம்திருமுறை - தோடுடைய செவியன்
இரண்டாம் திருமுறை - பாடல் வீணையர்
மூன்றாம் திருமுறை - நிரைகழல் அரவம்
நான்காம் திருமுறை - கூற்றாயினவாறு
ஐந்தாம் திருமுறை - அன்னம் பாலிக்கும்
ஆறாம் திருமுறை - நிலைபெறுமாறெண்ணுதியேல்
ஏழாம் திருமுறை - பித்தா பிறை சூடி
எட்டாம் திருமுறை - மெய்தான் அரும்பி (திருவாசகம்)
திருக்கோவையார் -

திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண்டோங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லியினொல்கி அனநடை வாய்ந்
துருவளர் காமன்தன் வென்றிக் கொடி போன்று ஒளிர்கின்றதே.

ஒன்பதாம் திருமுறை - ஒளிவளர் விளக்கே, மன்னுகதில்லை
பத்தாம் திருமுறை - சிவசிவ என்கிலர்

பதினோராம் திருமுறை-

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற
கன்னம்பயில் பொழில் ஆலவாயில்
மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க.
பண்பா லியாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

பன்னிரண்டாம் திருமுறை - என்றும் இன்பம் பெருகும்

என்றவாறு பாராயணத்துடனும், சங்கொலி, சேமக்கலஒலி, நெய்விளக்குத்தீபம், கற்பூரதீபம் என்பவற்றுடனும் உள்வீதி ஊர்வலமாக இத்திருமுறை ஏடுகள், திருமுறை முற்றோதலில் பங்குபற்றிய சிவனடியார்களால் தமது உச்சியில் தாங்கி வரப்பட்டு திருமுறை முற்றோதல் பூர்த்தி செய்யப்பட்டது. அதன்பின்பு ஏறக்குறைய 12.30 மணியளவில் மாகேசுர பூசையுடன் முற்றோதல் நிறைவேறியது.

உ
சிவ சிவ

# பஞ்ச பூத உற்பத்தி

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் ஐந்தும் தூல பூதங்கள் எனப்படும். இவை ஒன்றின் ஒன்றாகக் காரியப்பட்டு தோன்றின என்பது மாயாவாதிகளின் கொள்கை. சைவசித்தாந்தத்தின் கொள்கை அவை அல்ல. அவை தூல பூதங்கள் ஆகையால் அவற்றிற்கு காரணமாகிய சூக்கும பூதங்களில் இருந்து தோன்றின என்பதே சைவசித்தாந்தக் கொள்கையாம். சூக்கும பூதங்கள் ஆவன சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்துமாம். தன்மாத்திரை காரண தன்மாத்திரை எனவும் விடய தன்மாத்திரை எனவும் இருவகைப்படும். அவற்றுள் காரண தன்மாத்திரையே சூக்கும பூதமாகும்.

இச் சூக்கும பூதங்களில் சத்தத்தில் நின்று ஆகாயம் தோன்றும். பரிசத்தில் நின்று வாயு தோன்றும். உருவத்தில் நின்று தேயு தோன்றும். இரசத்தினின்று அப்பு தோன்றும். கந்தத்தில் இருந்து பிருதிவி தோன்றும். சூக்கும பூதமாவது குண சமூகமாய் அருவாய் நிற்கும் நிலை, அவ்வியத்தமாய் நுண்ணியதாய் நிற்கும் நிலையென்றும் சொல்லலாம். தூல பூதமாவது அக்குணங்களும் பொருளும் சேர்ந்து எவர்க்கும் புலனாகும்படி தூலமாய் நிற்கும் நிலை. ஆகாயமும் அதன் சத்த குணமும் எவர்க்கும் புலனாகும். வாயுவும் அதன் சத்தம், பரிசம் என்னும் இரண்டு குணங்களும் எவர்க்கும் புலனாகும். தேயுவும் அதன் சத்த, பரிச, உருவ என்னும் மூன்று குணங்களும் எவர்க்கும் புலனாகும். அப்புவும் அதன் சத்த, பரிச, உருவ, ரசம் என்னும் நான்கு குணங்களும் எவர்க்கும் புலனாகும். பிருதிவியும் அதன் சத்த, பரிச, உருவ, ரச, கந்தம் என்னும் ஐந்து குணங்களும் எவர்க்கும் புலனாகும். சூக்கும பூதமாகிய தன்மாத்திரைகள் இவ்வாறு புலனாக, அவையாதலன்றி நுண்மைப்பட்டு மறைந்து நிற்கின்ற பொழுது சூக்கும பூதம் எனவும், எவர்க்கும் புலனாகும்படி தூலமாய் வெளிப்பட்டு நிற்கும் பொழுது தூலபூதம் எனவும் ஆகிய இந்த வேற்றுமையே அவ்விரண்டுக்கும் இடையில் உள்ளன.

ஓர் ஆலம் விதையின் உள்ளே பின்னர் தூலமாய்க் காணப்படும் வேர், மரம், கிளை, இலை, விழுது முதலிய எல்லாம் முன்னர் விதையாய் இருக்கும்போதே நுண்ணியதாய் அடங்கி கிடக்கக் காண்கின்றோம். பின்பு பிற காரணங்கள் சேர்ந்தபடியால் அவை தூலமாய் வெளிப்பட்டு எவர்க்கும் புலனாகும்படி நிற்க காண்கிறோம். காரணமாகிய விதையில் மரம் சூக்குமமாய் இருந்ததும் காரியப்பாட்டில் தூலமாய் நின்றதுமே அவ் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடாம்.

இப்படியே தன்மாத்திரையில் பஞ்சபூதமாகிய பொருள்களும் அவற்றின் குணமும் சூக்குமமாய் நின்று பின்பு அவை தூலமாய் வெளிப்பட்டுத் தோன்றும்.

இவ் உண்மையை அறியாத மாயாவாதிகள், ஆகாயம் முதலிய பூதங்கள் ஒன்றின் ஒன்றாய் தோன்றும் என்று ஸ்மார்த்தமதம் பற்றி வாதிக்கின்றனர். ஸ்மிருதி நூல்கள் பிரம்ம பூத அண்டத்துக்கு காரணம் பிரமம் என்றும், அப்பிரமத்தில் நின்று ஆகாயம் முதலிய தத்துவங்கள் ஒன்றினொன்றாய்த் தோன்றும் என்றும் கூறும். அது ஸ்மிருதி மதமாம் அன்றி ஏனைய வேத ஆகம புராண இதிகாசங்கட்கு உடன்பாடாக மாட்டாது. சூக்கும பூதங்களில் இருந்தே தூல பூதங்கள் பிறந்தன என்பது மற்ற எல்லா நூல்களுக்கும் கருத்தாம்.

இனி, ஆகாயம் முதலிய பூதங்கள் ஒன்றோடு ஒன்றாய் தோன்ற இயையுமா

என்பதனைப் பொருந்தும் வண்ணம் வைத்துப் பார்ப்போம்;

ஆகாயம், சத்தம் என்னும் ஒரே குணமுடையது. வாயு சத்தத்தோடு பரிசமும் ஆகிய இரு குணங்கள் உடையது. தேயு, சத்தம், பரிசங்களோடு உருவமாகிய மூன்று குணங்கள் உடையது. அப்பு, சத்த பரிச உருவங்களோடு இரசமாகிய நான்கு குணங்கள் உடையது. பிருதிவி, சத்த பரிச உருவ ரசங்களோடு கந்தமாகிய ஐந்து குணங்களுடையது. இவ்வாறு ஆகாயம் முதலிய பூதங்கள் முறையே ஒன்றும் இரண்டும் மூன்றும் நான்கும் ஐந்தும் ஆகிய ஐந்து குணவேறுபாடுகள் உடையன.

எப்பொழுதும் காரண காரியங்களின் வேற்றுமை யாதெனில் சூக்குமாய் இருந்ததும் பின்பு தூலப்படுதலுமாகிய இவையேயாகும். பிருதிவிக்கு அப்பு காரணம் எனில் பிருதிவியில் சத்தம், பரிசம், உருவம், ரசம், கந்தம் என்னும் ஐந்து குணமுங்களும் அப்புவில் இருக்க வேண்டும். அப்புவுக்குத் தேயு காரணமெனில் அப்புவில் உள்ள சத்தம், பரிசம், உருவம். ரசம் என்னும் நான்கு குணங்களும் தேயுவில் இருக்க வேண்டும். தேயுவுக்கு வாயு காரணம் எனில் தேயுவில் உள்ள சத்தம் பரிச உருவம் என்னும் முக்குணங்களும் வாயுவில் இருக்க வேண்டும். வாயுவுக்கு ஆகாயம் காரணம் எனில் வாயுவில் உள்ள சத்தம் பரிசம் என்னும் இரு குணங்களும் ஆகாயத்தில் இருக்க வேண்டும். ஆகாயத்தில் வாயுவின் சிறப்பு குணமாகிய பரிச குணம் இல்லை. பரிச குணம் இல்லாத ஆகாயம் பரிச குணமுடைய வாயுவுக்குச் சூக்கும நிலையாகிய காரணம் ஆகமாட்டாது.

1. வாயுவில் தேயுவின் சிறப்பு குணமாகிய உருவம் இல்லை, ஆதலால் உருவ குணம் இல்லாத வாயு உருவ குணமுடைய தேயுவின் சூக்கும நிலையாகிய காரணமாக மாட்டாது.

2. தேயுவில் அப்புவின் சிறப்பு குணமாகிய இரசம் இல்லை. ஆதலால் இரச குணமில்லாத தேயு இரச குணமுடைய அப்புவின் சூக்கும நிலையாகிய காரணமாக மாட்டாது.

3. அப்புவில் பிருதிவியின் சிறப்பு குணமாகிய கந்தம் இல்லை. ஆதலால் கந்த குணம் இல்லாத அப்பு கந்த குணமுடைய பிருதிவியின் சூக்கும நிலையாகிய காரணமாக மாட்டாது.

ஆகாயத்தில் சத்தம் ஒன்றே அல்லாமல் ஏனைய நான்கு குணமும் இல்லை. வாயுவில் சத்தம் பரிசம் ஆகிய இரண்டு குணமும் அன்றி ஏனைய மூன்று குணமும் இல்லை. தேயுவில் சத்தம் பரிசம் உருவம் ஆகிய மூன்றுமே தவிர ஏனைய இரண்டு குணமுமில்லை. அப்புவில் சத்தம் பரிசம் உருவம் இரசங்களின்றி கந்த குணம் இல்லை. ஆதலால் காரணத்தில் இல்லாத குணம் காரியத்தில் உண்டாக யாதோர் ஏதுவும் இல்லை.

இல்லாதது வராது உள்ளது போகாது என்னும் நியமத்தால் இல்லாத குணம் பின்னர் உண்டாக மாட்டாது. நெல்லின் கண் நெற்பயிரும், பாக்கில் கமுகும், தேங்காயில் தென்னையும், ஆலம் வித்தில் ஆலமரமும் உண்டாகுமே தவிர மற்றயது வராது. நெல் கமுகாயும், கமுகு தென்னையாயும், தென்னை பலாவாயும் உருவாகாது. உள்ளதே தோன்றும்.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

உ
சிவமயம்

# கந்தபுராணம்
# நன்றி மறப்பதால் வரும் கேடு

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், தர்மாசிரியர்
சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு), M.A.,
(ஓய்வுநிலை கணக்காய்வாளர், மக்கள் வங்கி.)

கச்சியப்ப சிவாசாரியாரால் இயற்றப் பெற்ற கந்தபுராணம், 'புராண நன்னாயகம்' என்று போற்றப்படுகின்றது. சிவபுராணங்களில் சிறந்ததாகக் கருதப்படும் கந்தபுராணம் சிவபரத்துவத்தைக் கூறிப் புன்னெறியை விலக்கி, நன்னெறியைக் காட்டுகின்றது.

**"புன்னெறி யதனிற்செல்லும் போக்கினை விலக்கி மேலாம்**
**நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி**
**என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட**
**பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி."**

என்ற கந்தபுராணச் செய்யுள் இக்கருத்தை வலியுறுத்தி, நல்வழியைக் காட்டி நிற்கின்றது. கந்தபுராணத்தின் ஆழமான அடிப்படைக் கருத்து செய்ந்நன்றியை மறக்கக் கூடாது என்பதாகும்.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு."**

என்பது வள்ளுவன் தந்த வாய்மை மொழி. தக்கன் தவம் செய்து சிவபெருமானிடமிருந்து பல வரங்களைப் பெற்றான். அதேபோல் சூரபத்மனும் பல வரங்களைப் பெற்றவன். இவர்கள் இருவரும் தமக்கு வரங்கள் அளித்துச் செய்த நன்றியை மறந்தவர்கள். தக்கன் சிவபெருமானை மதிக்காது இகழ்ந்தவன்; சூரபத்மன் சிவனே, முருகன் என்பதை உணர்ந்தும் ஆணவ வயப்பட்டு முருகனோடு போர் செய்தவன். இவ்விருவரும் செய்ந்நன்றியை மறந்தவர்கள்; அதனால் துன்பம் அடையப் பெற்றவர்கள்; தண்டனை பெற்றவர்கள். கேடுகளைத் தேடிக் கொண்டவர்கள்.

**"நன்றிமறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று."**

என்ற பொய்யாமொழியாரின் கருத்தைப் புறந்தள்ளி அல்லற்பட்டவர்கள்.

தக்கனைத் தவம் செய்யும்படி அறிவுரை வழங்கியவர் அவனின் தந்தையான பிரமதேவர். சிவபெருமானே முழுமுதற்கடவுள்; சிவனையன்றி வேறு கடவுளர் இல்லை என்று அவனுக்கு இடித்துக் கூறியவர். சிவனை வணங்கி அருளைப் பெற்று முத்தியடைவதே மேலானது என்று எடுத்துரைத்தவர்.

**"அவனருள் பெறாது முத்தியடைந்தனர் இல்லை யல்லால்**
**அவனருள் இன்றி வாழும் அமரரும் யாரும் இல்லை**
**அவனருள் எய்தின் எய்தா அரும்பொருள் இல்லை ஆணை**
**அவனலாது இறைவன் இல்லை அவனை நீஅடைதி என்றான்."**

பிரமதேவனின் இக்கருத்தை ஏற்ற தக்கன் நீண்டகாலம் அரிய கடுந்தவம் செய்து

இறைவனிடம் பல வரங்கள் கேட்டான். அவை தனது தன்முனைப்பையும், தற்போதத்தையும் நிலை நாட்டுவதற்கானவையாக அமைந்திருந்தனவேயன்றி, பிரமதேவன் சொல்லிய முத்தியை அடைவதற்கானவையாக அமைந்திருக்கவில்லை.

**தக்கன் கேட்டுப் பெற்ற வரங்கள்**

1. தனது ஆக்கினசக்கரம், விண், மண், திருமால், பிரமன் முதலியோரிடத்திலும் செல்ல வேண்டும்.
2. சிவபெருமானை வணங்கும் உயிர்கள் அனைத்தும் தன்னையும் வணங்கவேண்டும்.
3. தான் சிவபெருமானையன்றி வேறு எவரையும் வழிபடாதிருக்க வேண்டும்.
4. தனது கட்டளைகளுக்குத் தேவர்களும், முனிவர்களும், அசுரர்களும் பணிந்து ஏவல் செய்யவேண்டும்.
5. தனக்குப் பல புதல்வர்களும், புதல்விகளும் வேண்டும்; அவர்கள் இறவாதிருக்கவும் வேண்டும்.
6. உமாதேவியார் தனக்கு மகளாகத் தோன்ற வேண்டும்.
7. சிவபெருமான் தனக்கு மருமகனாக வந்து தனது மகள் உமாதேவியாரை மணம் புரிதல் வேண்டும்.

தக்கன் சிவபெருமானிடம் வேண்டிப் பெற்ற இவ் வரங்கள் அவனது ஆணவத்தடிப்பையும் அகங்கார மமகாரச் செருக்கையுமே காட்டி நிற்பவையாக உள்ளன.

இதே போல், சூரபத்மனும் நெடுங்காலம் அருந்தவம் புரிந்து, தனது அங்கங்களை ஒவ்வொன்றாக வெட்டி வேள்வித்தீயில் இட்டதோடல்லாது தானும் அத்தீயில் வீழ்ந்து, சிவன் பிரத்தியட்சமாகத் தோன்றி உயிர்ப்பித்தபோது பல வரங்களை வேண்டினான்.

**சூரபத்மன் கேட்டுப் பெற்ற வரங்கள்.**

1. 1008 அண்டங்களை, 108 யுகங்கள் தான் ஆட்சிசெய்தல்.
2. அண்டங்களெங்கும் செல்லக்கூடிய **இந்திரஞாலம்** என்னும் தேரைப் பெறுதல்.
3. அவ்வண்டங்களை ஆட்சி செய்யும் ஆக்கினா சக்கரத்தைப் பெறுதல்.
4. எவரையும் வெற்றி கொள்ளக்கூடிய பாசுபதம், வாள் முதலிய தெய்வீகப் படைக்கலங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
5. என்றும் அழியாத வச்சிரயாக்கையுடையவனாக இருத்தல்.

சூரபத்மன் சிவபெருமானிடம் வேண்டிப்பெற்ற இவ்வரங்களும் அவனது அகங்காரத்தின் உச்ச நிலையினையும், மமகாரத்தின் இறுக்கப்பாட்டையும் சுட்டி நிற்பவையாக உள்ளன.

சிவபெருமான் தக்கனுக்கும், சூரபத்மனுக்கும் வரம் அளித்துச் செய்த நன்றியை மறந்தார்கள். அதனால் பெருங்கேடுகள் சூழப்பெற்றார்கள்.

தக்கன் சிவபெருமானை மதியாது செய்த யாகம் தீமையில் முடிவுபெற்றது. வீரபத்திரரால் அவனது தலை துண்டிக்கப்பட்டது. யாகத்தில் கலந்து கொண்ட பிரம்மா, விஷ்ணு முதலிய தேவர்களும் அவர்களது துணைவியர்களும் மட்டுமன்றி முனிவர்களும், அவர்களது பத்தினியர்களும் கூட சிவபெருமானின் உக்கிரத்தினின்றும் தோன்றிய வீரபத்திரராலும், காளியாலும் தண்டிக்கப்பட்டார்கள். நன்றி மறந்த தக்கனோடு கூட்டுச் சேர்ந்தோரும் சேர்ந்தே தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு இச்சம்பவங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

சூரபத்மன் சிவபெருமானே முருகன் என்பதை உணர்ந்தபோதும், சிவபெருமான் வரமளித்த நன்றியை மறந்து போர்செய்து தண்டிக்கப்பட்டான். தன்னோடு போர்புரிய

வந்த சூரபத்மனுக்குத் தனது திருப் பெருவடிவத்தைக் காட்டி நல்லுணர்ச்சி என்ற நன்றியைச் செய்தபோது அவன் முருகனே சிவன் என்பதைக் கண்டுகொண்டான். தனது சகோதரனான சிங்கமுகாசூரனும், மகன் இரணியனும் கூறியவாறு முருகனே பரமன் என்பது உண்மை யெனக்கண்டு கொள்ளுகிறான்.

**“இங்கென துயிர்போலுற்ற இளவலும் இளய சேயும்**
**செங்கையில் வேலோன் தன்னைச் சிறுவனென் றெண்ணல்கண்டாய்**
**பங்கயன் முதலோர் காணாப் பரமனேயாகு மென்றார்**
**ஆங்கவர் சொன்னவாறும் சரதமே யானதன்றே.”**

என்று தெளிந்த சூரபத்மன்

**“கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னைப்**
**பாலனென்றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திலேன் யான்**
**மாலயன் தனக்கும் ஏனை வானவர் தனக்கும் யார்க்கும்**
**மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தியன்றோ.”**

எனத் தெளிவடைந்தவனின் மனநிலை முருகப்பெருமானைப் போற்றுதல் செய்வதாக அமைகிறது.

**“சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை**
**தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலு**
**ஆழுதல் வேண்டும் தீமை அகன்று நான் இவற்காளாகி**
**வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.”**

முருகன் திருப்பெருவடிவத்தைக் காட்டி அருளாட்சி நல்கியபோதும் கூட சூரபத்மன் அந்த நன்றியையும் மறந்து, மானத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்கிறான். இதனால் தானும் துயருற்றுத் தன் சுற்றமும் அழிநிலையடைவதற்குக் காரணனாக நின்றான் என்பது கவனிக்கத்தக்கது.

**சயந்தனின் கேள்வியும் பிரகஸ்பதியின் விடையும்**

இந்திரனின் மகன் சயந்தன் அரசாட்சி செய்துகொண்டிருந்தபோது தேவகுருவான பிரகஸ்பதியிடம் “தேவகுருவே, நான்முகன் முதலிய தேவர்களும் முனிவர்களும் சூரபத்மனால் கொடிய துன்பங்களை அனுபவித்துத் தங்கள் மேன்மைகளை இழந்து, இழிவுற்றுத் திறனற்றுத் திண்டாடி நின்றமைக்குக் காரணம் என்ன? ” என்று வினவுகிறான். அதற்குத் தேவகுரு, தக்கன் சிவபெருமானை நிந்தித்துச் செய்த யாகத்தில் அவர்கள் கலந்துகொண்ட பாவத்தின் அறுவடையே இதற்குக் காரணம் என்று கூறினார்.

**“விண்ணவராயினோர்க்கும் மேதகு முனிவர் யார்க்கும்**
**எண்ணமில் சூரன் தன்னால் எய்திய தீமை யெல்லாம்**
**நண்ணலர் புரமூன்றட்ட நாதனையன்றித் தக்கன்**
**பண்ணிய மகத்திற் புக்க பாவத்தால் விளைந்ததென்றான்”**

- கந்தபுராணம் தட்சகாண்டம்

நன்றி மறந்து புன்றொழிலாகிய தீமை செய்பவர்களை அந்நன்றியே கொன்றுவிடும் என்று இரணியன் தனது தந்தை சூரபத்மனிடம் கூறுவதும் நோக்கத்தக்கது. இதைக் கந்தபுராணம்,

**"ஒன்றொரு பயன்றனை உதவினோர் மனம்**
**கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்**
**புன்றொழில் அவர்க்கு முன் புரிந்த நன்றியே**
**கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?"**

என்று விளக்குகிறது.

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை; தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை"
"மாதா பிதா குரு தெய்வம்"
"வேத நாயகனே போற்றி"

என்றெல்லாம் **சைவத்திறம்** கூறுகிறது. இக்கருத்தைக் கந்தபுராண மார்க்கண்டேயப் படலத்தில் மிருகண்டுய முனிவர் தனது தந்தையாராகிய குச்சகமுனிவரிடம் கூறுவதாக அமைவதைக் காணமுடிகிறது.

**"தந்தைசொல் மறுப்பவர்கள் தாயுரை தடுப்போர்**
**அந்தமறு தேசிகர்தம் ஆணையை இகழ்ந்தோர்**
**வந்தனை செய் வேத நெறி மாற்றினார்கள் மாறாச்**
**செந்தழலாய நிரயத்திடை சேர்வார்."**

தந்தை, தாய், குரு, வேதநெறியென்றவாறு நல்வாழ்வு காட்டும் நன்றியைச் செய்கின்றன. அந்நன்றியைக் கொன்றவர்கள் நரகத்தில் அழுந்துவர் என்பதை இப் பாடல் வலியுறுத்துகிறது.

கந்தபுராணம், நன்றிமறந்தவர்கள் கேடடைவர் என்பதோடு, நன்றி செய்பவர்கள் நற்பேறு பெறுவர் என்பதையும் கூறுகிறது. கந்தபுராணத்தை மனமுருகிப் பாடுபவர்களுக்கு, அது **சிவகதி** அளிக்கும் நன்றியைச் செய்கிறது என்பதை,

**"இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்றினிது மேவிச்**
**சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி அதனிற் சேர்வர்**
**அந்தமில் அவுணர்தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேல்**
**கந்தவேள் புராணம் தன்னைக் காதலித்தோதுவோரே."**

என்ற கந்தபுராணக் காப்புச் செய்யுள் சான்று பகர்கிறது.

கந்தபுராண படனம் செய்பவர்களுக்கும் அது நன்றியாயிருந்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்றது. 1958இல் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிப்பு ஏற்படாதிருக்கக் கந்தபுராண படனம் செய்யும்படி யோகர்சுவாமிகள் கூற, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயச் சூழலில் கந்தபுராணபடனம் செய்ததும், மறுநாள் கலகம் நின்றுவிட்டது. இச் சிறப்பை மனதில் நிறுத்திய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் **கந்தபுராண கலாசாரம்** என்ற நூலை எழுதி யாழ்பாண கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என நிறுவியுள்ளார்.

இறைவன் பெருங்கருணையாளனாதலால் தக்கனும், சூரபத்மனும் தம் தவறை உணர்ந்த போது தக்கனுக்கு ஆட்டுத்தலை அளித்தும், சூரபத்மனைக் கோழிக்கொடி, மயில்வாகனமாக்கியும் அருள் புரிந்து நன்றிக்கு மதிப்பளித்தமை குறிப்பிடத்தக்கது.

"நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்றுதருங் கொல் எனவேண்டா - நின்று
தளராவளர் தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்."

என்ற ஔவை வெண்பா இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

உ
சிவமயம்

# பெண்ணடியார் திறம்

பண்டிதை மரகதா சிவலிங்கம்

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத்தொகை, நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி, தேவார பிரபந்தம் என்பவற்றை அடியொற்றி, சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியருளினார். சிவனடியார்களுடைய அருமை பெருமைகளை உலகறியச் செய்தார். திருத்தொண்டர் புராணம் 13 சருக்கங்களையும் 4286 செய்யுட்களையும் கொண்ட பெரிய புராணமாகும். 12ஆம் திருமுறையாக போற்றப்படுகின்றது.

சுந்தரமூர்த்தி நாயனார் தாம் பாடிய திருத்தொண்டத்தொகையுள் 60 தனியடியார்களைப் போற்றியுள்ளார். இறுதிப்பாட்டில் தன்னையும், தன் தாய்தந்தையரை குறிப்பிட்டதனால் 63 தனியடியார்கள் போற்றப்படுகின்றனர். இவர்களுள் செயற்கரிய செயல்களைச் செய்த காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியாருடன் தன் தாயாராகிய இசைஞானியாரையும் அடியார்களாகப் பெருமைப் படுத்தினார். இம் மூவரோடு பெரியபுராணத்துள் 34 பெண்கள் பேசப்படுகின்றனர்.

மனைவியராக 21 பெண்களும், தாயாராக 6 பெண்களும், மகள் முறையில் 6 பெண்களும், சகோதரியாக ஒருவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒரே ஒரு சகோதரியாக சிறப்பாகப் பேசப்படுபவர் திலகவதியார். சமண சமயத்தைச் சார்ந்து 'தருமசேனர்' என்ற பெயரோடு விளங்கிய தம்பியாராகிய திருநாவுக்கரசரை மீட்டெடுத்துச் சைவத்திற்குத் தொண்டாற்றச் செய்து அடியாராக்கிய பெருமை திலகவதியாரையே சாரும். 63 நாயன்மார்களுள் ஒருவராகப் பதியப்படாவிட்டாலும் நாவுக்கரசு சுவாமிகளுடைய சரித்திரத்துள் சிறப்பித்துப் பேசப்படுபவர். தாய் தந்தை கணவன் இல்லாது தனித்து வாழ்ந்தாலும் ஆசார சீலராக சைவசமய வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியவர். விபூதியின் மகிமையை உலகறியச் செய்தவர்.

மனைவியர் எனப் போற்றப்படுகின்ற பெண்களுள் மங்கையர்க்கரசியார் கணவன் நின்றசீர் நெடுமாறன் சமணசமயத்தை தழுவியபொழுது கணவனுக்குப் பின்னால் சென்று சமண சமயத்தைத் தழுவாது கணவனையும் வெறுக்காது அமைச்சர் குலச்சிறையார் துணையோடு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை மதுரைக்கு வரவழைத்துப் பாண்டிய மன்னனைச் சைவசமயத்திற்குத் திரும்பக் கொண்டுவந்த பெருமை அம் மாதரசிக்கே என்றபடியால் அவர் நாயன்மாருள் ஒருவராகச் சிறப்புப் பெறுகின்றார்.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய மனைவியராக சங்கிலியார், பரவையார் சிறப்புப் பெறுகின்றனர்.

காரைக்காலம்மையார் சிறுமியாக விளங்கிய பொழுதே இறைவன் மேல் மிகுந்த பற்றுடையவர். பரமதத்தன் கொடுத்த மாங்கனியிலொன்றைப் பசியோடு வந்த சிவனடியாருக்கு

உண்ணக்கொடுத்தார். கணவன் மற்ற மாங்கனியைக் கொண்டுவா என்ற பொழுது உண்மையைக் கூறியிருக்கலாம். ஆனால் தெய்வபக்தி நிறைந்த பெண்ணானபடியால் இறைவனிடமே கேட்டு மாங்கனியைப் பெற்றுக்கொடுத்தார். பின்னாளில் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டு, அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை என்ற நான்கு பிரபந்தங்களை இயற்றினார். இறைவனால் "அம்மையே" என அழைக்கப்பட்ட பெருமையுடையவர். 63 நாயன்மார்களுள் ஒருவராகப் போற்றப்படுகின்றார்.

இளையான்குடிமாற நாயனாருடைய மனைவியும் பசியோடு வந்தவரை உணவில்லை என்று அனுப்பாது விதைத்த நெல்லை எடுத்து வந்து சோறாக்கிப் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக விளங்கினார்.

குங்கிலியக்கலய நாயனாருடைய மனைவி பிள்ளைகள் பசியால் துடிப்பதைப் பொறுக்காது தன் தாலியைக் கழற்றிக் கொடுத்தபொழுது கணவன் குங்கிலியம் வாங்கித் தூபமிட்டதை அறிந்தும் கோபமுறாது பொறுமைகாத்து இறையருள் பெற்றதனால் வீடுநிறைந்த செல்வத்தைப் பெற்று அடியார்களுக்கு அமுதூட்டி ஈற்றில் சிவபதமடைந்தார்.

சிறுத்தொண்ட நாயனாருடைய மனைவி வெண்காட்டு நங்கை பெற்ற ஒரேயொரு மகன் சீராளனை கணவனுடைய விரதம் கைகூடவேண்டும் என்ற எண்ணத்தால் பிள்ளைக்கறியமுது படைத்து இறைவனருள் பெற்றார்.

அப்பூதியடிகள் அரவம் தீண்டி மகன் இறந்ததை அறிந்தும் பிள்ளைக்காக ஏங்கி அழாமல் மனைவி கணவனோடு சேர்ந்து திருநாவுக்கரசு நாயனாருக்கு உணவு படைக்க விழைகின்றார். சிவனடியாரைப் போற்றுகின்ற கணவனே கண்கண்ட தெய்வமாக வாழ்ந்த மங்கையாகத் திகழ்கின்றாள்.

இவர்கள் போலவே திருநீலகண்ட நாயனார், கலியநாயனார், அமர்நீதி நாயனார், இயற்பகை நாயனார், மெய்ப்பொருள் நாயனார், கலிக்கம்ப நாயனார், கழற்சிங்கன், திருநீலநக்க நாயனார், அரிவாட்ட நாயனார், அமர்நீதி நாயனார் போன்றவர்கள் மனைவியோடு வாழ்ந்து இறைபதம் எய்தியவர்கள்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய பாடல்களை யாழில் அமைத்து வாசித்த திருநீலகண்டயாழ்ப்பாணர் மனைவி மதங்கசூளாமணியுடன் நாயனாருடைய திருமணநாளில் தோன்றிய சோதியுட் கலந்து சிவபதமடைந்தார்.

அடுத்து தாயாராக சிறப்புப் பெற்றவர்கள் அறுவர் பெரியபுராணத்துள் பேசப்படுகின்றனர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய தாய் பகவதியார், சுந்தரமூர்த்தி நாயனாருடைய தாய் இசைஞானியார், திருநாவுக்கரசு நாயனாருடைய தாய் மாதினியார், சண்டேஸ்வரருடைய தாய் பவித்திரை, கண்ணப்ப நாயனாருடைய தாய், கோச்செங்கட்சோழ நாயனாருடைய தாய் கமலவதி. ஒரு நாளிகை கழித்து இக்குழந்தை பிறந்தால் பேரரசனாக திகழ்வான் என்ற சோதிடர் கூற்றுக்கிணங்க தலைகீழாகக்கட்டி தன்னை

தொங்கவிடும்படி கூறி ஒரு நாளிகை கழித்து குழந்தை பிறந்ததால் தாயாகிய கமலவதி தன்னுயிர் நீத்தாள். குழந்தையின் கண்கள் சிவந்து காணப்பட்டதால் கோச்செங்கண்ணன் என பெயர் பெற்றான். கோச்செங்கட்சோழ நாயனாரும் மாடக்கோவில்கள் பல அமைத்தும் தில்லைவாழ் அந்தணர்களுக்கு திருமாளிகைகள் கட்டுவித்தும் புகழ் பெற்றவர். தான் இறந்தாலும் குழந்தை பேரோடும் புகழோடும் வாழவேண்டுமென்ற தாய் இங்கு பெருமை பெறுகிறாள்.

மகள் என்ற முறையில் அறுவர் பெரியபுராணத்துள் குறிப்பிடப்பட்டுள்ளனர். சிவநேசச் செட்டியார் மகள் பூம்பாவை, முயலகன் நோயால் பீடிக்கப்பட்டிருந்த கொல்லிமழவன் மகள், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு திருமணம் பேசிய புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகள் ஆகியோர் முக்கியமானவர்கள். ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் நம்பாண்டார் மகளை திருமணம் செய்து சோதியுள் புகுந்தது, கோட்புலி நாயனார் சுந்தரமூர்த்திநாயனாரிடம் தம் புதல்வியர் சிங்கடியாரையும், வனப்பகையாரையும் ஆட்கொள்ளவேண்டும் என இரந்த பொழுது இவ்விருவரும் எமக்குப் புதல்வியராவர் என்று கூறி ஆசீர்வதித்தது. இறைவன் மாவிரதியார் வேடங்கொண்டு மானக்கஞ்சாற நாயனார் வீடு சென்று திருமணம் முடிக்க இருந்த மகளுடைய கூந்தலை "நமது பஞ்சவடிக்குதவும்" என்று கேட்டபொழுது மறு பேச்சின்றி கூந்தலை அரிந்து கொடுத்த பொழுது கவலையடையாத மகளாக விளங்கியது சுட்டிக்காட்டத்தக்கது.

இப்படியாக சகோதரி, தாய், மனைவி, மகள் எனச் செயற்கரிய செயல்களைச் செய்த பெண்கள் பெருமையுறுகிறார்கள். நாயன்மாருடைய பெருமைகளைச் சைவ உலகம் போற்றும் போதெல்லாம் இம் மாதரசிகளுடைய புகழும் பேசப்படும்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

5ஆம் பக்கத் தொடர்ச்சி
மாயாவாதிகள் இவ்வுண்மை அறியமாட்டார்கள். இவ்வுண்மையை அறியாது பூதங்கள் ஒன்றில் இருந்து இன்னுமொன்று தோன்றும் என்பர்.
தூலம் சூக்குமத்தில் இருந்து வருவதற்கு உவமை மெய்கண்டசாத்திர நூலான சிவஞானசித்தியார் 234ஆம் பாடலில் பின்வருமாறு இடம்பெறுகிறது.

சூக்குமங் கெட்டுத் தூலந் தோன்றிடா, சூக்கு மத்தின்
ஆக்கியோ ருட்டல்கி டப்ப தின்றுட லாக்குந் தன்மைக்கு
ஒக்கிய சத்தி யுண்டாய் உடல்தருங் காலம் உற்று
நீக்கிட மரம்பின் வேரோர் நீள்மரம் நிகழ்த்து மாபோல்.

சூக்கும உடல் கெட்டுத் தூல உடல் உண்டாகும் என்பது அல்ல சூக்குமத்தாலே வேறு ஓர் உடல் ஆக்கப்படுவதும் இல்லை

சூக்குமத்தில் கிடந்த சத்தியின் வடிவம் ஒரு காலத்தில் பரு உடலாக வடிவங் கொள்ளும். ஒரு மரத்தில் இருந்து இன்னும் ஒரு மரம் வருவது மாதிரி என்பதாம்.

உ
சிவமயம்

பெரியபுராணத் தொடர்

# விறன்மிண்ட நாயனார்

சித்தாந்தரத்தினம் பத்மினி ராஜேந்திரா

வரலாற்றுப் பெருமைமிக்க புராணச்சிறப்புமிக்க, மலைநாட்டிலே மிகச்சிறப்புடன் விளங்கும் தலங்களிலே செங்குன்றூரும் ஒன்றாகும். இவ்வூரில் உழவுத்தொழிலில் வேளாளர் குடி வல்லமை பெற்றிருந்தது. அந்த வேளாளர் மரபில் இறைவனின் திருவருளால் அவதாரம் செய்தார் விறல் மிண்டர்

இவ்வடியார், திருநீறும் கண்டிகையும் பூண்டு, நதியும், மதியும், பாம்பும் புனைந்த வேணியரின் செஞ்சேவடிகளை வணங்கி வழிபட்டு வந்தார். அரனாரிடம் பேரன்பு பூண்டிருந்தாற்போல், அரனார்தம் அடியார்களிடமும் அளவிட முடியாத பேரன்பும், பெருமதிப்பும் கொண்டிருந்தார்.

அஞ்சா நெஞ்சமும், அறநெறி உள்ளமும் படைத்த விறன்மிண்டர் ஆன்றோர் மரபு ஒழுக்கப்படி, முதலில் சிவனடியார்களைத் தொழுது வழிபட்டு, அவர்களது அருளைப் பெற்ற பின்னர்தான், ஆலயத்திற்குள் எழுந்தருளியிருக்கும் பெருமானை வணங்குவார்.

இவ்வாறு சிவத்தலங்கள் தோறும் சென்று, ஆங்காங்கேயுள்ள தொண்டர்களைத் தொழுவதும், திருச்சடையானைச் சேவிப்பதுமாக, தலயாத்திரை நடத்திக் கொண்டு வந்த இவ்வடியார், சிறப்புமிக்க திருவாரூரை வந்தடைந்தார்.

தேவாசிரிய மண்டபத்தில் குழுமியிருந்த அடியார்களை வணங்கி, தாமும் அவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். வழக்கம்போல், சுந்தரமூர்த்தி நாயனார், புற்றிடங்கொண்ட நாதரை வழிபட வந்தார். அவர் அடியவர்களை மனதால் வணங்கியவாறு, வேறுபுறமாக ஒதுங்கிச் சென்றார். "இறைவனை வழிபடுவது எளிது, அடியாரை வழிபடுவது அரிது. அடியாரை வணங்குவதற்கு தக்க தகுதியும், பக்தியும், அன்பும் இருத்தல்வேண்டும். அஃது தனக்கு இல்லாமற் போயிற்றே, அடியார்களைப் பேணும் பேற்றினைத் தாம் பெறவில்லையே" என்ற மனத்துடன், அடியார்களை மனத்தால் மட்டும் வழிபட்டுச் செல்வதை சுந்தரர் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இத்தகைய சுந்தரரின் உள்ளத் தூய்மையினை உணராத விறன்மிண்டர் அவர்மீது சினங் கொண்டார். சுந்தரரின் செவிகளில் விழுமாறு "முதலில் வணங்கத்தக்க தேவாதி தேவர்கள் இங்கிருப்பதை மறந்துவிட்டு அங்கு செல்கிறாரே. என்னபயன்? வன்றொண்டன் அவ்வடியார்களுக்குப் புறம்பானவன். அவரை வலிய ஆட்கொண்ட வீதிவிடங்கப் பெருமானும், இவ்வடியார்களுக்குப் புறம்பானவன் தான்" எனக் கடுமையாகச் சொன்னார்.

விறன்மிண்டர் மொழிந்ததைக் கேட்ட சுந்தரமூர்த்தி நாயனார், விறன்மிண்டர் அடியவர்களிடத்துக் கொண்டுள்ள பக்தி எத்துணை சிறப்புடையது என்பதனை எண்ணிப் பெருமையுற்றார். சுந்தரர் எம்பெருமானின் திருமுன் வீழ்ந்து வணங்கி. "அடியார்களுக்கு

அடியானாகும் பேரின்ப நிலையைத் தந்தருள வேண்டும்" என இறைஞ்சினார்.

அப்பொழுது இறைவன் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என அடி எடுத்துக் கொடுக்க, விண்ணும் மண்ணும் உய்ய "திருத்தொண்டத் தொகை" என்னும் பதிகத்தைப் பாடித் திருக்கூட்டத்தைத் தொழுது அணைத்தார் சுந்தரமூர்த்தி நாயனார்.

திருத்தொண்டர்களின் பெருமைகளைச் சொல்லும், திருத்தொண்டத்தொகை இல்லாவிடில் நாயன்மார்களின் பெருமைகளைக் கூறும் பெரியபுராணமே தோன்றியிராது. "உலகம் உய்யவும், மக்கள் எல்லோரும் கடைத்தேறவும், சைவம் தழைக்கவும் சுந்தரருடைய திருவுள்ளம் திருத்தொண்டர்களிடம் பதிந்திருக்கிறது" என்பதை உணர்ந்த விறன்மிண்டர் களிப்பெய்தினார்.

**இந்த நாயனாரைப் பற்றி மற்றொரு சம்பவம் சொல்லப்படுகிறது.**

சுந்தரர் மீது கோபம் கொண்ட அடிகளார் சுந்தரரையும் வெறுத்தார். திருவாரூரையும் வெறுத்தார். திருவாரூர் எல்லையைத் தாண்டுவதில்லை என ஒரு திடசங்கற்பம் பூண்டார். அத்துடன், தமது இல்லத்திற்கு விருந்துக்கு வரும் அன்பர்களிடம், "எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்" என்ற ஒரு கேள்வி கேட்பார். அவர்கள் திருவாரூர் என்று சொன்னால், அடிகளார் அடுத்துள்ள கொடுவாளை எடுத்து விருந்துண்ட வந்தவரின் காலைத் துண்டிப்பார்.

இதற்காகவே அவரது மனைவியார் வீடு தேடிவரும் அன்பர்களிடம், அடியாரின் மனோநிலையைக் கூறி ஊரைப்பற்றி விசாரித்தால் திருவாரூர் என்று மட்டும் சொல்லாதீர்கள் என்று முன்கூட்டியே எச்சரிக்கை செய்துவிடுவார்.

திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகேசப்பெருமான், தமது அன்புத்தொண்டனை ஆட்கொண்டருளத் திருவுளம் கொண்டார். எம்பெருமான் சிவனடியார் போல் வேடம் பூண்டு நேராக நாயனார் இல்லத்திற்கு வந்தார்.

வாயிலில் நின்றுகொண்டு, "பவதி பிக்ஷாம் தெஹி!" எனக் குரல் கொடுத்தார். அடுக்களையில் வேலையாக நின்ற நாயனாரின் மனைவி ஓடிவந்து, சிவனடியாரைக் கண்டு மனமகிழ்ந்து "வாருங்கள்" என உள்ளே அழைத்துச் சென்றார். "சுவாமீ என் கணவர் வந்து கொண்டேயிருக்கிறார். அதற்கு முன் தேவரீரிடம், இந்த ஏழைக்கு ஒரு சிறு விண்ணப்பம்!"

"அம்மணீ! மங்களம் உண்டாகட்டும். விஷயத்தைக் சொல்வாய்". அம்மையார், அடியாரிடம் நாயனாரின் சங்கல்பத்தைக் கூறி "சுவாமி! தாங்கள் தயவு செய்து ஊரைப்பற்றி கேட்டால் திருவாரூர் என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

எம்பெருமான் குறுநகை சிந்த, "அம்மணீ! எனக்குப் பொய் பேசத் தெரியாது.

அதனால் நீ எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும். அவர் சாப்பிடும்போது கொடுவாளை வலதுபுறம்தானே வைத்திருப்பார். இன்றுமட்டும் அதனை இடதுபுறம் வைத்துவிடு." என்றார்.

அம்மையாரும் அதற்குச் சம்மதித்தார். அதற்குள் நாயனாரும் உள்ளிருந்து வெளியே வந்து, சிவனடியாரை வரவேற்று விருந்திற்கு எழுந்தருளச் செய்தார். இருவரும் இலை முன் அமர்ந்தார்கள். மனைவியார் உணவு பரிமாறிக்கொண்டிருந்தார். நாயனார் வழக்கம்போல, அடியவரைப்பார்த்து "சுவாமிக்கு எந்த ஊர்?"

"அங்கு இங்கு இல்லாமல் எங்கும் இருப்பேன். ஆயினும் அடியேன் சொந்தஊர் சுந்தரர் அவதரித்த திருவாரூரே ஆகும்!"

"என்ன! திருவாரூரா? அடியார்களை அவமதிக்கும் அந்த அற்பன் பிறந்த ஊரில் பிறந்தவரா நீர்?" என்று கோபத்துடன் வலது பக்கம் திரும்பி கொடுவாளை எடுக்க முயன்றார். அங்கு கொடுவாளைக் காணாது மனைவியை நோக்கினார். அவர் பயத்துடன் இடது புறம் வைக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டது என்று கூறினார்.

நாயனார் இடப்பக்கம் திரும்பினார். இதற்குள் அடியார் எழுந்து வெளியே ஓடினார். அடியாரைத் துரத்திக்கொண்டு நாயனார் ஓட, இருவரும் ஓடி ஓடித் திருவாரூர் எல்லையை அடைந்து ஊருக்குள் வந்து சேர்ந்தனர். நாயனார் களைத்துப்போய் நிலத்தில் வீழ்ந்தார்.

அடியார் சிரித்துக் கொண்டே, "நீர் இப்பொழுது திருவாரூர் எல்லையைக் கடந்து ஊருக்குள் வந்துவிட்டீரே" என்றார்.

நாயனார் மனம் பதறிப்போய், ஆத்திரத்தால் துடித்தார். தவறை உணர்ந்தார். கொடுவாளை எடுத்து தமது காலை வெட்டிக்கொண்டார்.

நாயனாரின் செயலைக் கண்டு, சிவபெருமான் அதற்கு மேலும் பக்தனைச் சோதிக்க விரும்பாமல் ரிஷப வாகனத்தில் கமலாம்பாள் சமேதராயக் காட்சி கொடுத்தார். தம்மை ஆட்கொண்டருளியவர் எம்பெருமானே என்பதனை உணர்ந்த, நாயனார் சிரம் மீது கரம் உயர்த்தி, கண்ணில் நீர்மல்கப் பக்தியுடன் பரமனைத் தொழுதார்.

எம்பெருமான், விறன்மிண்டருக்கு, சுந்தரர் அடியார்கள் மீது கொண்டுள்ள ஒப்பற்ற பக்தியை உணரச்செய்து, நாயனாருக்குப் பேரின்ப பெருவாழ்வு நல்கி அருளினார்.

"குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்"

- சுந்தரர்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

உ

# சைவசித்தாந்த எளிமைப்படுத்தலில் நாவலர் பெருமானின் பங்கு

சைவப்புலவர் சு. செல்லத்துரை

**பசு இயல் :**

**24. ஆன்மாக்களாவார் யார்?** நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடை உடையோராய், சார்ந்ததன் வண்ணமாய், சரீரம் தோறும் வெவ்வேறாய் வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்போராய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையோராய், தமக்கு ஒரு தலைவனை உடையோராய் இருப்பர். மேற்குறிப்பிட்ட வினாவுக்குரிய மூலம், சிவப்பிரகாசத்தின் 19ஆம் பாடலில் இருப்பதைக் காணலாம்.

**எண்ணரிதாய் நித்தமாய் இருண்மலத்தில் அழுத்தி**
**இருவினையின் தன்மைகளுக் கீடான யாக்கை**
**அண்ணல் அருளால் நண்ணி அவை அவரால் அதனால்**
**அலகில் நிகழ் போகங்கள் அருந்தும் ஆற்றால்**
**புண்ணியபாவம் புரிந்து போக்குவரவுடைத்தாய்**
**புணருமிருண் மலபாகம் பொருந்தியக்கால் அருளால்**
**உண்ணிலவும் இருளகற்றியாவும் உற்றிடு நல்**
**பசுவர்க்கம் எனவுரைப்பர் உணர்ந்தே.**

**இதன் விளக்கம் :** ஆன்மாக்கள் அளவுகடந்தனவாய் ஒரு காலத்திலும் அழியாதனவாய், ஆணவமலத்தினாலே மறைப்புண்டு கிடந்து, அவரவர் செய்த புண்ணிய பாவங்களுக்குரிய உடலை இறைவன் கருணையால் பெற்று, அவ்வுடம்பெனத் தோன்றாது பிரிந்து நின்று அவ்வுடம்புகளாலே புண்ணிய பாவம் புரிந்து அதனாலே பிறந்தும் இறந்தும், இருவினை ஒப்பு ஏற்பட்டபோது இறைவன் அருளால் ஆணவத்தில் நீங்கி இறைபாதம் சேரும்.

இங்கு சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் நாவலர் பெருமானின் விடையில் இரத்தினச் சுருக்கமாக இருப்பதைக் காணலாம்.

**28. ஆன்மாக்கள் எப்படிப் பிறந்து இறந்து உழலும்?** நல்வினை, தீவினை எனும் இருவினைக்கும் ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும், எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதத்தையும் உடையவைகளாய்ப் பிறந்து இறந்து உழலும்.

**29. நால்வகைத் தோற்றங்களாவன எவை?**

| | | | |
|---|---|---|---|
| 1. அண்டசம் | - முட்டை | 2. சுவேதசம் | - வியர்வை |
| 3. உற்பீசம் | - வித்து வேர் | 4. சராயுசம் | - கருப்பை |

இவற்றில் தோன்றுவன.

**30.எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?**

1. தேவர் - 11 இலட்சம்
2. மனிதர் - 9 இலட்சம்
3. விலங்கு - 10 இலட்சம்
4. பறவை - 10 இலட்சம்
5. ஊர்வன - 15 இலட்சம்
6. நீர்வாழ்வன - 10 இலட்சம்
7. தாவரம் - 19 இலட்சம்

ஆக மொத்தம் 84 இலட்சம் (நூறாயிரம்)

இவற்றுக்குரிய மூலம் சிவப்பிரகாசம் 47ஆவது பாடலில் இருப்பதைக் காணலாம்.

**தோற்றியிடும் அண்டசங்கள் சுவேதசங்கள் பாரில்**
**துதைந்துவரும் உற்பீசம் சராயுசங்கள் நான்கின்**
**ஊற்றமிகு தாபரங்கள் பத்தொன்ப தென்றும்**
**ஊர்வபதி னைந்தமரர் பதினொன் றோடுலவா**
**மாற்றருநீர் உறைவனநற் பறவைகள்நாற் காலி**
**மன்னியிடும் பப்பத்து மானிடர்ஒன் பதின்மர்**
**ஏற்றியொரு தொகையதனில் இயம்புவர்கள் யோனி**
**எண்பத்து நான்குநூ றாயிரமென் றெடுத்தே.**

இங்கு அடிக்கோடிட்ட இடங்களே அங்கு விடையாக உள்ளதைக் காணலாம்.

**25. ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?**

தூலசரீரம், சூக்கும சரீரம் என இருவகைப்படும்.

**36. ஆன்மாக்கள் வினைகளைச் செய்வதற்கும், வினைப் பயன்களை அனுபவிப்பதற்கும் இடம் யாது?**

இருவினைகளைச் செய்வதற்கும், இருவினைப்பயன்களை அனுபவிப்பதற்கும் இடம் பூமி. நல்வினைப்பயனை அனுபவித்தற்கு இடம் சுவர்க்கம் முதலிய மேலுலகங்கள். தீவினைப் பயனை அனுபவித்தற்குரிய இடம் 28 கோடி நரகங்கள்.

**37. பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?**

நல்வினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே சூக்கும சரீரத்தோடு, பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு சுவர்க்கத்தில் இன்பத்தை அனுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள் தூல சரீரத்தை விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூதசாரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக் கொண்டு நரகத்திலே போய் அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அனுபவிக்கும். இப்படியன்றித் தூலசரீரத்தை விட்டவுடனே பூமியிலே யோனிவாய்ப்பட்டு மற்றொரு தூலசரீரத்தை எடுப்பதும் உண்டு.

**38. சுவர்க்கத்திலே இன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியிலே வந்து மனிதர்களாய்ப்பிறக்கும்.

**39. நரகத்திலே துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து முன்பு தாவரங்களாயும் பின்பு நீர்வாழ்வனவாயும் பின்பு ஊர்வனவாயும் பின்பு பறவைகளாயும் பின்பு விலங்குகளாயும் பிறந்து பின்பு முன்செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

இவ் வினா விடைகளுடைய மூலத்தை பின்வரும் சிவஞானசித்தியார் பாடலில் காணலாம்.

**126.**

**பூதனா சரீரம்போனால் புரிஅட்டகாயம் தானே**
**யாதனா சரீரமாகி இன்பதுன்பங்கள் எல்லாம்**
**நாதனார்ஆணை உய்க்கநரகொடு சுவர்க்கம் துய்த்து**
**தீதிலா அணுவாய்யோனி சேர்ந்திரும் சீவன்எல்லாம்.**

(பூதனாசரீரம் - தூலசரீரம், அட்டகாயம் - சூக்கும சரீரம்)
(சுவர்க்கத்தில் பூதசார சரீரம், நரகத்தில் யாதனா சரீரம்)

இந்தத் தூல உடம்பு நீங்கிய பொழுது சூக்கும உடம்பு, அந்த உடம்போடு உடன் போகாது, மத்தி வரை அது உயிரோடு நிலைபெற்று இருக்கும். அந்தச் சூக்கும உடம்பில் நின்று வினைப்பயனை அனுபவிப்பதற்கு உரிய வெவ்வேறு உடம்புகளை உயிர்க்கு உண்டாக்கும். ஆகவே உயிர்கள் எல்லாம் அந்தச் சூக்கும உடம்போடு இறைவன் ஆணைப்படி சுவர்க்கம் அல்லது நரகத்திற்குச் சென்று, அந்தந்த உலகத்திற்கு உரியனவாகிய தூல உடம்புகளைப் பெற்று இன்பதுன்பங்களை அனுபவிக்கும். அதன் பிறகு எஞ்சிய சஞ்சித வினைப்பயனை அனுபவிக்கும் பொருட்டு மண்ணுலகத்தில் தாயின் கருப்பையில் வந்து விழும். அடுத்த பாடலில் சித்தியாரில், உயிரானது,

**127.**

**உடல்விடா யோனிபற்றி உதிப்பினும் உதிக்கு மொன்றிற்**
**படர்வுறா துரும்பா வத்தாற் பாடாணம் போற்கி டந்து**
**கடனதாம் காலஞ் சென்றாற் கடுநர கதனில் வீழ்ந்தங்(கு)**
**இடருறும் உருவங் கன்மத் தளவினில் எடுக்கு மன்றே.**

**இதன் பொருள் :** அந்தந்த வினைகளது வன்மை மென்மைகளுக்கு ஏற்ப பூத சரீரம் ஆகி இந்த உடல் போனபோது யாதனா சரீரத்தை எடுக்காது மற்றும் ஒரு சரீரத்தை எடுப்பதும் உண்டு. யாதனா சரீரம் போன பொழுது, பூத சரீரத்தை எடுக்காமல் மற்றுமோர் யாதனா சரீரத்தை எடுப்பதும் உண்டு. ஆதலால் இந்த உடம்பினை விட்டு இடைவிடாது பிறிதொரு உடம்பினை எடுப்பதும் ஒரு உடம்பிலும் தங்காமல், மிகுந்த பாவம் செய்த காரணத்தால் சூக்கும தேகத்துடன் கல்போல் கிடந்து அக்கால எல்லை நீங்கும் பொழுது, உயிர் கொடிய நரகத்தில் விழுந்து, அங்கு துன்புற்று இந்த உலகத்துக்கு வந்து பிறப்பதும் உண்டு. இந்தச் செய்திகளையெல்லாம் நாவலர் பெருமான் சுருக்கமாகத் தெளிவாகத் தந்திருப்பதைக் காணலாம்.

தொடரும்...

# கண்ணீரஞ்சலி

காலஞ்சென்ற

திரு. **கருணையானந்தன்**

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது.

(ஆசிரியப்பா)

நாவலர் வழியில் நற்பணி புரியும்
காவல ரெங்கள் கருணை யானந்தா
காலன் உம்மைக் கவர்ந்தது கேட்டுச்
சாலவும் வருந்திச் சிவனை நினைந்து
தோத்திரம் பாடித் தொழுது நின்று
சாத்தி மலரால் அர்ச்சனை செய்தோம்
நன்றி மறப்பது நன்றல என்று
எண்ணி எண்ணி ஏங்கினோம் உம்மை
வரிமதிப் பாள ரெனவுள் நாட்டில்
இருந்தீர் இறைவரித் திணைக்களம் தன்னில்
கரிசனை யுடனே கரும மாற்றி
உயரிய சைவத்தை உயர்வுடன் தழுவி
நற்பணி புரிந்த உத்தம! உம்மைப்
பலரும் போற்றப் பணிவுடன் நாமும்
கடமை உணர்கரு ணையா னந்தா
தடையில் விடையும் தந்து நின்றோமே!
தில்லைக் கூத்தன் திருவடி சேர்ந்து
எல்லையி லின்பம் என்றும் காணவே!

பாவாக்கம்,
சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி
திருவாவடுதுறை ஆதீனம்,
கொழும்பு - சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர் சார்பில்.

# கண்ணீரஞ்சலி

காலஞ்சென்ற சைவப்புலவர்

திருமதி. **நவரத்தினம்மா வெள்ளைச்சாமி**

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்டது.

(ஆசிரியப்பா)

தன்னிக ரில்லாத் தனித்தமிழ் வளரவும்
உண்மைச் சைவம் உலகில் விளங்கவும்
சேவைகள் பலவுஞ் சோர்வறச் செய்து
தேவன் நினைவுடன் திகழ்ந்தீர் அம்மா!
ஆசிரி யையாய் அரும்பணி புரிந்து
மாசின்றி வாழ்வை மகிழ்வுடன் கழிக்கச்
சாவைத் தந்திடும் காலன் கயிற்றில்
சாவைத் தழுவிய செய்தி அறிந்தோம்.
திடீரென நடந்த திடுக்கிடுஞ் செய்தி
விட்டக லாமல் வதைக்குதே இன்றும்.
அன்புச் செல்வங்கள் அருகில் இருக்க
அன்புக் கணவரும் கலங்கிடக் கண்டோம்.
தேவன் அருளும் சேர்ந்திட வன்றோ
சைவப் புலவர்ச் சால்புறு பட்டமும்
சாலவும் உமக்குச் சிறப்பைத் தந்திட
காலனும் சதியுயிர் கவர வந்தானோ?
திருவா வடுதுறை சந்நி தானம்
பெருமனத் துடனே பற்றுடன் நிறுவிய
சைவசித் தாந்த மையப் பயிலுநர்
சேவையிற் சிறந்த ஆசிரி யர்களும்
சேவடி போற்றிச் சிவனை நினைத்து
தேவா ரத்துடன் தீபமும் ஏற்றி
உரிமை யோடு கொழும்பு நகரில்
புரிந்துணர் வோடு துதித்திடு வோமே.

பாவாக்கம்,
சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி
திருவாவடுதுறை ஆதீனம்,
கொழும்பு - சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர் சார்பில்.

உ

ஓம் நமசிவாய

# இசையை விளக்கிட இயல்பினில் நின்றேத்தி

- இளஞ்சைவப்புலவர் இரா. ஜீவன் பிரசான்
சிவதொண்டன், சைவநெறிச்சன்மார்க்கர்.

எமது சைவசமயத்தில் இசை என்ற சொல் மிகவும் உயரிய தானத்தில் வைத்து எண்ணப்படுகின்றமை யாவரும் அறிந்ததே. நாதவடிவமாகிய இசை இறையனாரை வழிபடும் சாதனங்களில் ஒன்றாகும். இத்தகைய இசையைக் கருவியாகக் கொண்டே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற அநுபூதிமான்களும் சைவத்தையும், தமிழையும் வளரச் செய்தனர். இத்தகைய இசை இம்மை, மறுமைப் பயன்களை நல்கக்கூடியது என்பதை தேவாரத் திருப்பதிகங்களின் வாயிலாக சமயகுரவர்கள் இயற்றிய அற்புதங்க்ளினூடாக துணியமுடிகிறது.

பக்திச்சுவை ததும்பவல்ல வகையில் நம்பியாண்டார் நம்பி அவர்களால் தொகுக்கப்பட்ட திருமுறைகளுக்கு திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலே தோன்றிய பெண்ணரசியான மதங்கசூளாமணி யென்பவரால் எருக்கத்தம்புலியூரில் வைத்து பண்ணமைக்கப்பட்டது. பண் என்பது இசையின் வடிவமாகும். சங்ககாலத்திற்குப் பின் கிடைத்த இசைபற்றிய ஆதாரங்களில் பண்களே உள்ளன. இவை 103 எனப்பட்டபோதும்; தற்போது 24 பண்களே மிஞ்சியுள்ளன.

பண் என்பதற்கு பொருள் விளக்கத்தினை அடியார்க்கு நல்லார் தன்னுடைய திருப்பாட்டில் வருமாறு கூறுகிறார்;

“பாவோடணைதல் இசையென்றார், பண்ணென்றார்
மேவாய் பெருந்தானம் எட்டானும் - பாவாய்
எடுத்தல் முதலா இருநான்கும் பண்ணிப்
படுத்தாமையாற் பண்ணென்று பார்.”

இசையினை நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்னும் தானங்களில் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகைத் தொழில்களாய்ச் சீர்பெறப் பண்ணிப் பாடப்படுவது பண் என குறிப்பிடுகின்றார்.

மேலும் தமிழிசை ஏழு, அவையாவன; குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகும். இவற்றை உரியவாறு அறிந்தால் பண்ணைப் படைக்கவும், பாடவும் முடியும் எனவும், அதுசார் தேர்ச்சி கைகூடும் எனவும் சுந்தரர் **“ஏழிசையாய் இசைப்பயனாய்”** (7.51:10) உரைத்துள்ளார்.

இவ்விதமாக பண்ணாகிய இசையே இறையனாருக்கு பிரியமானது. அவற்றை மனமுருகி, பொருளுணர்ந்து பாடுவதால் உரிய பயன் கிட்டும் என்பது திண்ணம்.

அருளாளர்களால் பாடப்பட்ட திருமுறைகள் அவை அமைந்துள்ள பண்ணமைவுகளுக்கமையப் பாடப்பட வேண்டும் என்பது முறை. இதற்கமைய, இரவில் பாடும் பண்களை இராப்பண்கள் எனவும், பகலிற் பாடப்படும் பண்களைப் பகற்பண்கள் எனவும், பொதுவாகப் பாடப்படும் பண்களை பொதுப்பண்கள் எனவும் வகைப்படுத்தி உள்ளனர். அவற்றை நோக்கின்;

திருவாவடுதுறை ஆதீன முறையில் அமைந்த பண்கள்

| | இல. | திருவாவடுதுறை ஆதீனம் கூறும் பண்கள் | ஓதுவார்கள் கூறும் இராகங்கள் |
|---|---|---|---|
| **பகற் பண்கள்** | 1. | புறநீர்மை | பூபாளம் |
| | 2. | காந்தாரம் (பியந்தை) | நவரோஜ் |
| | 3. | கௌசிகம் | பைரவி |
| | 4. | இந்தளம் (நௌித பஞ்சமி) | நாதநாமக்கிரியை |
| | 5. | தக்கேசி | காம்போதி |
| | 6. | நட்டராகம் (சாதாரி) | பந்துவராளி |
| | 7. | நட்டபாடை | நாட்டை |
| | 8. | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் |
| | 9. | காந்தார பஞ்சமம் | கேதாரகௌளை |
| | 10. | பஞ்சமம் | ஆகிரி |
| **இராப்பண்கள்** | 1. | தக்கராகம் | காம்போதி |
| | 2. | பழந்தக்கராகம் | சுத்தசாவேரி |
| | 3. | சீகாமரம் | நாதநாமக்கிரியை |
| | 4. | கொல்லி அல்லது கொல்லிக்கௌவானம் அல்லது திருநேரிசை அல்லது திருவிருத்தம் | நவரோஸ் |
| | 5. | வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| | 6. | மேகராகக்குறிஞ்சி | நீலாம்பரி |
| | 7. | குறிஞ்சி | அரிகாம்போதி அல்லது எதுகுலகாம்போதி கலப்பு |
| | 8. | அந்தாளிக்குறிஞ்சி | சாமா - ஸைலதேசாட்சி |
| **பொதுப்பண்கள்** | 1. | செவ்வழி | எதுகுலகாம்போதி |
| | 2. | செந்துருத்தி | மத்தியமாவதி |
| | 3. | திருத்தாண்டகம் | அரிகாம்போதி |

மூலம்:- பக்தி அனுபவம்

இவ்விதமாக உரிய பண்ணில் பாடினால் அவை உரிய பயன்களைத் தரவல்லன. சம்பந்தர் கொஞ்சு தமிழில் தமிழிசை வளர்த்தவர். அவர் தன்னுடைய பதிகங்களை 23 பண்களில் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அப்பர் தன்னுடைய தேவாரத்தில்;

**"பண்ணிற் பாடல்கள் பக்திசெய் வித்தகர்க்**
**கண்ணித் தாகு மமுதினை"** (திருமுறை 5.44.8)

என்ற அடிகளினூடாக பண்ணாலமைந்த பாடல்கள் பக்தியை பாய்ச்சவல்ல அமுதமென குறிப்பிட்டுள்ளார். அப்பரடிகள் பத்து பண்களிலும், திருநேரிசை, திருவிருத்தம் முதலிய பதிகங்களை பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சுந்தரர் 17 பண்களில் தாளநயத்துடன் பாடியுள்ளமையும் பண்பற்றிய விளக்கம், இசை எத்தனை வகைப்படும், அவற்றை பயிற்சிபெற செய்யும் முறை பற்றியும் தன்னுடைய திருப்பாடல்களில் இயம்பியுள்ளமை சிறப்பாகும்.

இவ்விதமாக இறையனாருக்குப் பிரியமான இசைவடிவான (திருப்பதிகங்கள்) திருமுறைகளை உரிய பண்ணில், பொருளுணர்ந்து ஓதிப் பயன்பெற வேண்டும். இக்கால கட்டத்தில் எம்மவர்களில் இத்தகைய இசையை உணர்ந்து பாடுவது அருகிவருகின்றமை கவலைக்குரியதே! இனிவரும் காலங்களில் இத்தகைய இசையை இறையனார் மகிழும் வண்ணம் பாடி இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுய்வோமாக!

**"பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்."** (திருக்குறள் 58 - 3)

திருக்குறட் கதை

# கடன்

**ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை** திருக்குறள் 478.

ஒருவனுக்கு வருவாய் குறைவாக இருந்தாலும் செலவு அதிகமாகாத பட்சத்தில் அதனால் துன்பமேதும் இல்லை.

அடியில் வருவது இந்த அருங்குறளை விளக்கும்

"தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்" என்பது திரிகடுகம். ஒவ்வொரு மனிதனும் நல்ல முயற்சி செய்து கடன்படாமல் வாழவேண்டும்.

சிலர் தொட்டதற்கெல்லாம் கடன்படுகின்றார்கள். கடன் கேட்டு வாங்குதல் என்பதைச் சிலர் பால் பாயசமாகக் கருதியுள்ளார்கள். அது நஞ்சினும் கொடியதென அறிகின்றார்களில்லை.

ஒவ்வொரு மனிதனும் தனது வருவாய்க்குத் தக்கவாறுதான் செலவழிக்கவேண்டும். வருவாய் குறைகின்றபோது செலவினங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

மனிதனுக்குக் கடன் என்பது பெருந்தொல்லை கொடுப்பது; எல்லையில்லாத இடரை விளைவிப்பது; இவ்வில்லங்கத்தில் கூடுமானவரை மனிதன் சிக்கிக் கொள்ளக்கூடாது. ஒவ்வொருவரும் அடியில் வரும் கருத்துக்களை ஆழமாகச் சிந்திக்கவேண்டும்.

தனக்கு மாதா மாதம் வரும் வருவாயை வகுத்துத்தான் செலவு செய்யவேண்டும். வருவாய்க்கு அதிகம் செலவழித்து அதனால் கடன்படுகின்றார்கள். அக்கடனுக்கு வட்டியும் ஏறும். வட்டியையும் கடனையும் எந்த வழியில் தீர்க்க முடியும்? தனக்கு வரும் வருவாய், குடும்பச் செலவுக்கே போதுமானதாக இல்லாமலிருககும் நிலையில் கடனை அடைக்க முடியாதுதானே. நாள் செல்லச் செல்ல கடனுக்கு வட்டி ஏறிக் கொண்டேயிருக்கும். ஒருவரிடத்தில் 500 ரூபாய் கடன் வாங்கினால், அக்கடனுக்கு 24மணி நேரமும் வட்டியேறிக் கொண்டேயிருக்கும்.

கடல் அலை ஓய்வதில்லை. அதுபோல் வட்டியாகிய கடன் அலையும் ஓயாது. வட்டியென்ற ஒன்றுக்குத் தூக்கம் கிடையாது. ஓய்வு கிடையாது. இரவு பகல் என்று மாறுபாடு கிடையாது. செல் மரத்தைத் தின்று விடுவதுபோல வட்டி மனிதனைத் தின்றுவிடும். 500ரூபா வாங்கிய ஒருவன் 10 வருடத்திற்குப்பின் 2000 ரூபா வட்டியும் முதலுமாகத் தரவேண்டியதாகிவிடும். நான்கு மடங்காகப் பெருகி விடுகின்றது.

அதனால் கடன்பட்டவன், கடனைத் திருப்பித் தரவழியின்றி, முதாதைகள் அவனுடைய நலங் கருதித் தேடிவைத்த வீடு, நிலம், நகை முதலியவற்றை விற்க நேரிடும். அல்லது கடன் தந்தவனிடம் அவமானம் அடைய நேரிடும். உத்தமமான உள்ளம் படைத்தவர்கள் அதனால் பெரிதும் கலங்குவர். "கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற சொற்றொடர் இது பற்றிஎழுந்தது.

நன்மனம் படைக்காதவர்கள் கடன் தந்தவனைப் பகைப்பர்; ஏமாற்றுவதற்கு வழி தேடுவர்.

எனக்குத் தெரிந்தவர் ஒருவர்; அவரிடம் கடன் தந்தவர் சென்று பல ஆண்டுகட்குப் பின்னர் கடனைத் திருப்பித் தருமாறு நயமாகக் கேட்டார்.

கடன்பட்டவர் கூறுகின்றார்; "ஐயா! நீர் என்னை நம்பித்தானே தந்தீர். கடைசிவரை நம்பி இரும். இப்போது என்ன அவசரம்? உமக்குச் சாப்பாட்டுக்கு இல்லாமலா கேட்கின்றீர்? என்னிடத்திலிருந்து வாங்கி இன்னொருவனுக்குத் தரப்போகின்றீர். அது என்னிடந்தான் இருக்கட்டுமே" என்றார். இன்னும் ஒருவர் கூறினார், "ஏனையா நீர் எனக்குக் கடன் தந்தீர்? முந்திய பிறப்பில் என்னிடம் வாங்கியிருப்பீர்; அதை இப்போது தந்தீர்; சத்தம் போடாமல் சாந்தமாக இரும்" என்றார்.

இதனால், கடன் பட்டவனுக்குத் தரவேண்டும் என்ற நினைவேயில்லை என்பது புலனாகின்றது. இவ்வாறு கடனைத் தராமல் மாள்பவர் மறுபிறப்பில் மாடாகவோ மனிதனாகவோ பிறந்து உழைத்துத் தர வேண்டும். அப்படித் தருகின்றபோது எத்துணையோ மடங்கு வட்டி பெருகி அத்துணையும் தரவேண்டி வரும். பழி பாவத்துக்கும் ஆளாகின்றானர்.

பலர் ஆசைக்கு அடிமையாகித் தம்மிடம் உள்ள சிறு தொகையுடன் பெருந்தொகை கடன் வாங்கி வீடு, நிலம் இவைகளை வாங்குவர். கடன் ஏறித் தொல்லைப்பட்டு விற்றுக் கடனையடைத்துத் தம்மிடம் இருந்த தொகையையும் இழந்துவிடுவர். அன்றியும் சிறிது கடன் மீதிக்கு நின்று கலக்கமுறுவர்.

கடன் என்பது ஒரு நோய்க்குச் சமானம். நோய் உடம்பையரிக்கும்; கடன் உள்ளத்தையும் உணர்வையும் அரிக்கும். அந்தோ! கடன் தொல்லை வடவாக்கினி போன்றது. மனிதனை உயிரோடு எரிக்கும் வன்மையுடையது.

ஒரு சமயம் இலண்டனை ஆண்ட மகாராணி - இந்தியாவுக்குச் சக்கரவர்த்தினியாயிருந்த விக்டோரியா அம்மையார் ஒரு கடையில் சாமான்கள் வாங்கினாராம். கையில் இருந்த பணத்தினும் சாமான்கள் அதிகமாக இருந்தன. கடைக்காரன் அரண்மனைக்குச் சென்று பணம் அனுப்பும் என்றானாம். மகாராணி பணத்துக்கு ஏற்ற அளவில் சாமான்கள் பெற்றுக் கொண்டாராம். கடனாக வாங்கக்கூடாது என்றும் கருதினாராம்.

ஆகவே, கடைக்காரன் கடன் தருகின்றான் என்று கருதி விருப்பம்போல் தேவைப்பட்டதையும் தேவைப்படாததையும் அள்ளிக் கொண்டு வரக்கூடாது. சிலர் துணிக்கடையில் கடன்; நகைக்கடையில் கடன்; பலசரக்குக்கடையில் கடன்; இப்படி இறைவன் எங்குமிருப்பதுபோல் கடன் எங்கும் இருக்கும்படி வாங்கி மனோ சாந்தி இழக்கின்றார்கள்.

கடன்பட்டுக் கலங்குகின்றவர்களைப் பார்ப்பதுவே ஒரு பரிதாபமான காட்சி. அதனால், இனியவை நாற்பது என்ற சங்க நூல் "கடன்பட்டு வாழாமை காண்டல் இனிதே" என்று கூறுகின்றது.

ஆகவே, அறிவுடையவர் கடன் படாமல் வாழ்வதற்கு முயல்வார்களாக.

தெய்வத்திரு திருமுருக
கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

உ
சிவமயம்

சென்ற இதழின் தொடர்ச்சி

# யாப்பிலக்கணம் (வினாவும் விடையும்)

## உறுப்பியலில் தளை

சித்தாந்தரத்தினம் செல்வி வ.தேவராணி.

**60. இவ் 7 தளைகளைக் கொண்டு நீர் உய்த்து உணர்ந்து கொள்வது யாது?**

| | | | |
|---|---|---|---|
| 1) | நேரொன்றாசிரியத்தளை | ஆசிரியத்தளைகள் | 2 |
| 2) | நிரையொன்றாசிரியத்தளை | | |
| 3) | இயற்சீர் வெண்டளை | வெண்டளைகள் | 2 |
| 4) | வெண்சீர் வெண்டளை | | |
| 5) | கலித்தளை | கலித்தளை | 1 |
| 6) | ஒன்றிய வஞ்சித்தளை | வஞ்சித்தளை | 2 |
| 7) | ஒன்றாத வஞ்சித்தளை | | |

என அறியலாம்.

குறிப்பு :- மேலே குறிப்பிடப்பட்ட (1,2,3) தளைகளும் நின்றசீர் ஈரசைச்சீராக நிற்குமாறும் இதனை அடுத்து வரும் (4,5,6,7) என இலக்கமிடப்பட்ட தளைகள் நின்றசீர் மூவசைச் சீராகவும் விளங்க, இச்சீர்களின் இறுதியசைக்கும் இவற்றுடன் தளைகாணவரும் வருஞ்சீரின் முதலசைக்கும் தளை அறியப்படும்.

**61. செய்யுளில் வரும் 7 தளைகளில் ஒவ்வொரு தளையும் அமையுமிடத்து, நின்றசீர் மாச்சீரா, விளச்சீரா, கனிச்சீரா, காய்ச்சீரா என்பதையும் அதன் இறுதி அசையையும் குறிப்பிடுவதுடன், வருஞ்சீரின் முதலசை எது என்பதையும் ஓர் அட்டவணை மூலம் அறியத்தருக.?**

| தளை | நின்றசீர் | வருஞ்சீரின் முதலசை |
|---|---|---|
| 1) நேரொன்றாசிரியத் தளை | மாச்சீர் ஆகும். இதன் இறுதியசை (நேர்), நேர் முன் | நேராகும் |
| 2) நிரையொன்றாசிரியத் தளை | விளச்சீராகும். இதன் இறுதியசை (நிரை), நிரைமுன் | நிரையாகும் |
| 3) இயற்சீர் வெண்டளை | மாச்சீர் வந்தால் இச்சீரின் இறுதியசை (நேர்), நேர் முன் | நிரையாகும் |
| | விளச்சீர் வந்தால் இச்சீரின் இறுதியசை (நிரை), நிரை முன் | நேராகும் |
| 4) வெண்சீர் வெண்டளை | காய்ச்சீராகும். இச்சீரின் இறுதியசை (நேர்), நேர் முன் | நேராகும் |
| 5) கலித்தளை | காய்ச்சீராகும். இச் சீரின் இறுதியசை (நேர்), நேர் முன் | நேராகும் |
| 6) ஒன்றிய வஞ்சித்தளை | கனிச்சீராகும். இச் சீரின் இறுதியசை (நேர்), நேர் முன் | நிரையாகும் |
| 7) ஒன்றாத வஞ்சித்தளை | கனிச்சீராகும். இச் சீரின் இறுதியசை (நிரை), நிரை முன் | நேராகும் |

குறிப்பு :- தளை காணும் பொழுது நின்றசீர் எது வெனவும், அதாவது மாச்சீரா, விளச்சீரா, காய்ச்சீரா, கனிச்சீரா என்றும், வருஞ்சீரின் முதலசை நேரசையா, நிரையசையா என்றும் பார்க்கவும். வருஞ்சீர் எது வென்று பார்க்க வேண்டியதில்லை.

**62. செய்யுளில் வரும் 7 தளைகளையும் உதாரணங்காட்டி விளக்குக?**

1) நேரொன்றாசிரியத்தளை :-

உதாரணம் :- "போது **சாந்தம்**"

இது மாமுன் நேர் (நேர் முன் நேர்) ஒன்றுவதால் ஏற்படுவதாகும்

2) நிரையொன்றாசிரியத்தளை :-

உதாரணம் :- "அணி**நிழ லசோ** கமர்ந்"

இது விளமுன் நிரை (நிரை முன் நிரை) ஒன்றுவதால் ஏற்படும். நேரொன்றாசிரியத் தளையும், நிரையொன்றாசிரியத் தளையும் **ஆசிரியத்தளை** என்று வழங்கப்படும்.

"மாமுன் நேரும் விளமுன் நிரையும்
வருவ தாசிரி யத்தளை யாமே"

என்ற கூற்று இதனை உறுதிப் படுத்துகின்றது.

3) இயற்சீர் வெண்டளை :-

நேரொன்றாசிரியத் தளையும் (நேரும் நேரும்) நிரையொன்றாசிரியத் தளையும் (நிரையும் நிரையும்) தளை கொண்டு நிற்க, இதற்கு எதிரிடையாக நேருக்கு நிரையும், நிரைக்கு நேருமாகத் தளை கொள்ளப்பட்டு **இயற்சீர் வெண்டளை** அமையும். இதனை

"மாமுன் நிரையும் விளமுன் நேரும்
வருவ தியற்சீர் வெண்டளை யாகும்" என்பர்.

உதாரணம் :- 1. கற் க X கச டறக்
நேர் நேர் நிரை நிரை

நேர் முன் நிரை அதாவது மா முன் நிரை ஆகும்

2. இல் லறம் X என் பது
நேர் நிரை நேர் நிரை

நிரை முன் நேர் அதாவது விள முன் நேர் ஆகும்.

இவை ஒன்றாமற் பொருந்தி வரும் தளை ஆகும்.

4) வெண்சீர் வெண்டளை :- காய் முன் நேர் வருவதாகும்.

உதாரணம் :- நாற் குண மு X நாற் படை யா

நேர் நிரை நேர் நேர் நிரை நேர்

காய் முன் நேர் ஆகும்

5) கலித்தளை :- காய் முன் நிரை வருவதாகும். அதாவது வெண்சீர் வெண்டளைக்கு மாறாக வருவது **கலித்தளை** ஆகும். இது கலிப்பாவிற்குரியது.

உதாரணம்:- "செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறித்த சினவாழ"

செல் வப் போர்க் X கதக் கண் ணன்

நேர் நேர் நேர் X நிரை நேர் நேர்

காய் முன் நிரை யாகுமென் றறிக.

6) ஒன்றிய வஞ்சித் தளை :- கனி முன் நிரை வந்தொன்றுதலாகும்.

உதாரணம் :- வெண் சா மரை X புடை பெயர் தரச்

நேர் நேர் நிரை X நிரை நிரை நிரை

கனி முன் நிரை என்றறிக

7) ஒன்றாத வஞ்சித் தளை :-

கனி முன் நேர் ஒன்றாமற் பொருந்தி வரும் தளையாகும்.

உதாரணம் :- செந் தா மரை X நாண் மலர் மிசை

நேர் நேர் நிரை X நேர் நிரை நிரை

கனி முன் நேர் வருவதாகும்

"கனிமுன் நிரையும் நேரும் வருதல்
ஒன்றிய ஒன்றா வஞ்சித்தளையே"

என்பதை நினைவிற் கொள்க. அதாவது கனி முன் நிரை (நிரை முன் நிரை) ஒன்றிய வஞ்சித்தளை எனவும் கனி முன் நேர் (நிரை முன் நேர்) ஒன்றாத வஞ்சித் தளை எனவும் பொருள்படும். இவ்விதம் வஞ்சித் தளை 2 வகைப்படும்.

**63. செய்யுளில் வரும் 7 தளைகளின் அமைப்பை நீர் என்னென்ன நூல்களின் துணைகொண்டறிவீரென உமக்குத் தெரிந்தவற்றைக் குறிப்பிடுக?**

| | |
|---|---|
| 1) நேரொன்றாசிரியத்தளை<br>2) நிரையொன்றாசிரியத்தளை | புறநானூறு, அகநானூறு, மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற ஆசிரியப்பாக்களில் அவதானிக்கலாம். |
| 3) இயற்சீர் வெண்டளை<br>4) வெண்சீர் வெண்டளை | இவை இரண்டும் வெண்பாவுக்குரியதாகையால் திருக்குறள், நளவெண்பா, நாலடியார் போன்ற நூல்களில் அவதானிக்கலாம். |
| 5) கலித்தளையைக் கலித்தொகைக் கலிப்பாக்களில் அவதானிக்கலாம். | |
| 6) ஒன்றிய வஞ்சித்தளை<br>7) ஒன்றாத வஞ்சித்தளை | இவ்விரு தளைகளையும் மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலைகளில் வரும் வஞ்சிப் பாக்களில் அவதானிக்கலாம். |

குறிப்பு:- இவ் 7 தளைகளையும் மேற்குறிப்பிட்ட நூல்களிற் பார்த்து அசை, சீர், வாய்பாடு, தளை இவற்றையும் பிரித்தறியப் பழகிக் கொள்ளுதல் அவசியமாகும். குறைந்தது ஒரு மாதத்திற்காவது ஒவ்வொருநாளும் தொடர்ச்சியாகச் செய்யுள்களைத் தேடி இப் பயிற்சியினைச் செய்துவர, இவை அனைத்தும் சிரமமின்றித் தானாகவே மனதிற் பதிந்து விடுமென்பதில் ஐயமில்லை என்றறிக.

**64. நிரை யொன்றாசிரியத் தளையையும் வெண்சீர் வெண்டளையையும் ஒப்பிடுக?**

| நிரையொன்றாசிரியத் தளை | வெண்சீர் வெண்டளை |
|---|---|
| இங்கே நின்றசீர் எதுவெனக்கவனிக்க வேண்டும். இது 2அசைகள் கொண்ட விளச்சீராய் இருக்கும். | இங்கே நின்றசீர் எதுவெனக் கவனிக்க வேண்டும். இது 3 அசை கொண்ட காய்ச்சீராய் இருக்கும். |
| இங்கே நின்ற சீரின் இறுதி அசை நிரையசையாக இருக்கும். வருஞ்சீர் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் வருஞ்சீரின் முதலசை நிரையசையாக இருக்க வேண்டும். | இங்கே நின்ற சீரின் இறுதியசை நேரசையாக இருக்கும். வருஞ்சீர் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் வருஞ்சீரின் முதலசை நேரசையாக இருக்க வேண்டும். |
| இத்தளை வெண்பாவிற்குரியதல்ல. அகவற்பாவிற் குரியதாகும். | இத்தளையானது வெண்பாவிற்கு உரியதாகும். |

**65. நேரொன்றாசிரியத் தளையையும் வெண்சீர் வெண்டளையையும் ஒப்பிடுக?**

| நேரொன்றாசிரியத்தளை | வெண்சீர் வெண்டளை |
|---|---|
| இங்கு நின்ற சீர் எதுவெனக் கவனிக்க வேண்டும். இங்கே ஈரசையாலான **மாச்சீர்** நின்ற சீராய் வரவேண்டும். | இங்கே நின்றசீர் எதுவெனக் கவனிக்க வேண்டும். இங்கே மூவசையாலான **காய்ச்சீர்** நின்ற சீராக வரவேண்டும். |
| இங்கே நின்ற சீரின் இறுதியசை நேரசையாக இருக்கும். | இங்கே நின்ற சீரின் இறுதியசை நேரசையாக இருக்கும். |
| இங்கே வருஞ்சீர் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் வருஞ்சீரின் முத்லசை நேரசையாக இருக்க வேண்டும். | இங்கே வருஞ்சீர் எதுவாகவும் இருக்கலாம். ஆனால் வருஞ்சீரின் முதலசை நேரசையாக இருக்க வேண்டும். |

**66. இயற்சீர் வெண்டளையையும் வெண்சீர் வெண்டளையையும் ஒப்பிடுக?**

| இயற்சீர் வெண்டளை | வெண்சீர் வெண்டளை |
|---|---|
| இயற்சீர் வெண்டளையில் நின்ற சீர் 2 அசைகளைக் கொண்டதாக இருக்கும் | வெண்சீர் வெண்டளையில் 3 அசைகளைக் கொண்டிருக்கும். |
| நின்ற சீர் மாச்சீர் அல்லது விளச் சீராக இருக்கும். | நின்ற சீர் காய்ச்சீராக இருக்கும். |
| நின்ற சீரின் ஈற்றசை நேராக வரின் வருஞ்சீரின் முதலசை நிரையசை யாகவும் நின்ற சீரின் ஈற்றசை நிரையசையாகவரின் வருஞ்சீரின் முதலசை நேரசையாகவும் ஒன்றாமற் பொருந்தி வரும். | நின்றசீரின் ஈற்றசை நேரசையாகவும் வருஞ்சீரின்முதலசை நேரசையாகவும் வந்தொன்றுதலாற் பொருந்தி வரும். |
| இயற்சீர் வெண்டளை வெண்பாவிலும் இடம் பெறும். | வெண்சீர் வெண்டளை வெண்பாவிற் குரியதாகும். |
| "மாமுன் நிரையும் விளமுன்நேரும் வருதல் இயற்சீர் வெண்டளையாகும்" என மனனம் செய்துகொள்ளவும் | "காய்முன் நேர்வருவது வெண்சீர் வெண்டளை" என மனனம் செய்துகொள்ளவும் |

தொடரும்....

சித்தாந்தரத்தினம் செல்வி வ. தேவராணி

சென்ற இதழின் தொடர்ச்சி...

# அகத்தியர் தேவாரத்திரட்டு உரைவிளக்கம்

## சுந்தரமூர்த்திநாயனார் - திருப்புன்கூர்

7ஆம் திருமுறை திருவடிகள் பண் - தக்கேசி

திருச்சிற்றம்பலம்

1. அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நாயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப-ரை) அந்தணாளன் - அந்தணச் சிறுவனாகிய மார்க்கண்டன், உன் அடைக்கலம்புகுத - தேவரீரைச் சரணடைய, அவனைக் காப்பது - அவனைப் புரப்பது, காரணமாக - காரணமாகக் கொண்டு, வந்தகாலன் தன் - எதிர்த்துவந்த கூற்றுவனது, ஆருயிர் அதனை - அரிய உயிரை, வவ்வினாய்க்கு உன்றன் - கலர்ந்த தேவரீருக்கு இயல்பாயுள்ள, வண்மைகண்டு - வள்ளன்மையை அறிந்து, அடியேன் - அடியவனும், எந்தைநீ - தந்தையாகிய தேவரீர், எனை - என்னையும், நமன் தமர் நலியில் - எனதூதுவர் வருத்துவதாயின், இவன் என் அடியான்என - இவனும் என் அடியனென்று, விலக்கும் - விலக்கி யருளுகின்ற, சிந்தையால் - எண்ணத்தால், வந்து உன் திருவடி அடைந்தேன் - வந்து தேவரீரது திருவடியைச் சேர்ந்தேன், செழும்பொழில் - வளவிய சோலைகள் சூழ்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளிய இறைவனே என்றவாறு.

2. வையகம் முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

(ப-ரை) வையகம் முற்றும் - உலகம் முழுவதும், மாமழை மறந்து - சிறந்த மழை மறத்தலினால், வயலில் நீர்இலை - வயலில் நீர் இல்லை யாயிற்று, மாநிலம் தருகோம் - அதிக நிலம் கொடுப்போம், எங்களை - அடியோங்களை, உய்யக் கொள்க என்ன - மழை பெய்வித்து உய்யக் கொண்டருள்க என்று வேண்ட, ஒளி கொள் - ஒளியைக் கொண்ட, வெண்முகிலாய் - வெண்ணிறமாகிய மேகங்களாகி, எங்கும் பரந்து - எவ்விடத்தும் பரவி, பெய்யுங் - பெய்கின்ற, மாமழை - பெரிய மழையினாலாகிய,

பெரு வெள்ளம் தவிர்த்து - பெரிய வெள்ளத்தை ஒழித்து, பெயர்த்தும் - மறுபடியும், பன்னிருவேலி கொண்டருளும் - பன்னிருவேலி நிலங்கொண்டருளிய, செய்கை கண்டு - திருவருட் செய்கையைப் பார்த்து, நின் திருவடி அடைந்தேன் - தேவரீரது திருவடியைச் சேர்ந்தேன், செழும் - செழுமை வாய்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரை இடமாக உடையவனே என்றவாறு.

3. **ஏத நன்னிலம் ஈரறு வேலி**
**ஏயர் கோனுற்ற இரும்பிணி தவிர்த்துக்**
**கோத னங்களின் பால்கறந் தாட்டக்**
**கோல வெண்மணற் சிவன்தன்மேற் சென்ற**
**தாதை தாளற எறிந்தசண் டிக்குன்**
**சடைமி சைமலர் அருள்செயக் கண்டு**
**பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்**
**பூம்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) நல்நிலம் - நல்ல நிலம், ஈரறுவேலி -பன்னிரண்டு வேலி கொடுத்து, ஏயர்கோன் உற்ற - ஏயர்கோன் கலிக்காமநாயனார் எய்திய, ஏதம் - துன்பத்தைச் செய்யும், இரும் பிணிதவிர்த்து - பெரிய நோயினை ஒழித்து, கோதனங்களின் - பசுக் கூட்டங்களினது, பால் கறந்து ஆட்ட - பாலைக் கறந்து திருமஞ்சனஞ் செய்ய, கோலம் - அழகிய, வெண்மணற் சிவன்மேல் - வெண்ணிறமாகிய மணலினாற் செய்த சிவ அருட்குறியின் மேல், சென்ற - சிதைக்கும் பொருட்டுச் சென்ற, தாதை தாளற - தந்தையின் கால்கள் அறும்படி, எறிந்த - துணிந்த, சண்டிக்கு - சண்டேச நாயனாருக்கு, உன் சடைமிசை மலர் - தேவரீரது சடையிற்றரித்த கொன்றைமலர்மாலையை, அருள் செயக்கண்டு - அருளியதைப் பார்த்து, பூதஆளி - பூதநாதரே, பூம் - பொலிவினையுடைய, பொழில் திருப்புன்கூர் உளானே - சோலை சூழ்ந்த திருப்புன்கூரை உடையவனே, நின் - தேவரீரது, பொன் அடி அடைந்தேன் - பொன்னடியைச் சரண் அடைந்தேன் என்றவாறு.

4. **நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்**
**நாவினுக் கரையன் நாளைப்போ வானும்**
**கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி**
**கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்**
**குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்**
**கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்**
**பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்**
**பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) நல் தமிழ் வல்ல - நல்ல தமிழ்ப் பாடலில் வன்மையுற்ற, ஞானசம்பந்தன் - திருஞான சம்பந்தரும், நாவினுக்கரையன் - திருநாவுக்கரசரும், நாளைப் போவானும் - திருநாளைப் போவாரும், கற்றசூதன் - கற்றுவல்ல மூர்க்க நாயனாரும், நல் சாக்கியன் - நல்ல சாக்கிய நாயனாரும், சிலந்தி - சிலந்திப் பூச்சியும், கண்ணப்பன் - கண்ணப்ப நாயனாரும், கணம்புல்லன் - கணம்புல்ல நாயனாரும், என்று இவர்கள் - என்று கூறும் இவர்கள் யாவரும், குற்றம் செய்யினும் - பலவிதமாகிய குற்றஞ் செய்தாலும், குணமெனக்

கருதும் - அவற்றைக் குணமாகக் கொண்டருளின, கொள்கை கண்டு - தேவரீரது திருவருட் கொள்கையைப் பார்த்து, பொன் திரள் - பொற்றிரளும், மணி - மணிகளும், கமலங்கள் - தாமரைகளும், மலரும் - பரந்து விளங்கும், பொய்கைசூழ் - தடாகங்கள் சூழப்பெற்ற, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளிய பெருமானே, நின் - தேவரீரது, குரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடியை, அடைந்தேன் - சரணமடைந்தேன் என்றவாறு.

5. **கோல மால்வரை மத்தென நாட்டிக்**
**கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த**
**ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய**
**அமரர் கட்கருள் புரிவது கருதி**
**நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு**
**கண்டத் தேவைத்த பித்தநீ செய்த**
**சீலம் கண்டுநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) கோலம் மால்வரை - அழகிய பெரிய மந்தரமலையை, மத்தென நாட்டி - மத்தாக நிறுத்தி, கோள் அரவு சுற்றி - அம்மலை யிடத்துத் துன்பஞ் செய்கின்ற வாசுகியாகிய பாம்பினைத் தாம்பாகச் சுற்றி, கடைந்து - பாற்கடலைக் கடைதலால், எழுந்த - அதில் தோன்றிய, ஆலம்நஞ்சு கண்டு - ஆலகால விடத்தைப் பார்த்து, அவர் - கடைந்த தேவர்களும் அசுரர்களும், மிக இரிய - மிகவும் அஞ்சித் திசைகள் தோறும் ஓட, அமரமர்கட்கு - அவருட் டேவர்கட்கு, அருள் புரிவது கருதி - அருள் புரிந்து காத்தல் கருதி, நீலமார்கடல் விடந்தனை - நீல நிறம் பொருந்திய கடலில் எழுந்த விடத்தினை, உண்டு - பானம் பண்ணி, கண்டத்தே - திருமிடற்றிலே, வைத்த - தரித்தருளிய, பித்த - பித்தரே, நீ செய்த - தேவரீர் செய்தருளிய, சீலம் கண்டு - அருளிரக்கமுள்ள குணத்தைப் பார்த்து, செழும்பொழில் - செழுவிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூர் உளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - அடைக்கலம் புகுந்தேன் என்றவாறு.

6. **இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்**
**இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்**
**மயக்கம் இல்புலி வானரம் நாகம்**
**வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்**
**அயர்ப்பொன் றின்றிநின் திருவடி அதனை**
**அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு**
**திகைப்பொன் றின்றிநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) இயக்கர் - கந்தருவர்கள், கின்னர் - கின்னரர்கள், யமனோடு - இயமனோடு, வருணர் - வருணர், இயங்குதீ - விளங்குகின்ற அக்கினி, வளி - வாயு, ஞாயிறு - சூரியன், திங்கள் - சந்திரன், மயக்கமில் புலி- மயக்கமில்லாத புலி, வானரம் - குரங்கு, நாகம் - பாம்பு, வசுக்கள் - வசுக்கள், வானவர் - தேவர்கள், தானவர் - அசுரர்கள், எல்லாம் - ஆகிய இவர் எல்லாரும், அயர்ப்பு ஒன்று இன்றி - சோர்வு சிறிதுமின்றி, நின் திருவடி அதனை -

தேவரீரது திருவடிகளை, அர்ச்சித்தார் - வழிவட்டவராய், பெறும் - அவர் பெற்ற, ஆர் அருள் கண்டு - பெறுதற்கரிய திருவருளைப் பார்த்து, செழும்பொழில் - செழுமிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, திகைப்பு ஒன்று இன்றி - மயங்குதல் சிறிது மில்லாமல், நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

7. **போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்**
**பொழில்கொள் ஆல்நிழற் கீழறம் புரிந்து**
**பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்**
**தருளி னாய்பண்டு பகீரதன் வேண்ட**
**ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை**
**நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த**
**தீர்த்த னேநின்றன் திருவடிய டைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) போர்த்த - பொத்தின, நீள் - நீண்ட, செவியாளர் - செவிப்புலனை யுடையவர்களாகிய, அந்தணர்க்கு - மறையவர்களுக்கு, பொழில்கொள் - சோலையினது தன்மையைப் பெற்ற, ஆல்நிழல்கீழ் - கல்லாலின் நிழலில், அறம் புரிந்து - தருமத்தை உபதேசித்து, பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, அன்று - அந்நாளில், பாசுபதம் - பாசுபதக் கணையை, கொடுத்தருளினாய் - கொடுத்தருளினீர், பகீரதன் வேண்ட - பகீரதன் இரந்து வேண்ட, ஆர்த்து வந்து இழியும் - ஆரவாரித்து வானினின்று இறங்கும், புனற்கங்கை நங்கையாளை - புனலுருவாகிய கங்கை நங்கையை, நின் சடைமிசை - தேவரீரது சடையில், கரந்த - ஒளிக்கச்செய்த, தீர்த்தனே - புனிதனே, செழும் பொழில் - செழுமிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, திகைப்பு ஒன்று இன்றி - மயங்குதல் சிறிது மில்லாமல், நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

8. **மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்**
**இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்**
**காவ லாளரென் றேவிய பின்னை**
**ஒருவ னீகரி காடரங் காக**
**மானை நோக்கியோர் மாநட மகிழ**
**மணிமு ழாமுழக் கவருள் செய்த**
**தேவ தேவநின் திருவடிய டைந்தேன்**
**செழும்பொ ழில் திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) மூ எயில் - மூன்று புரங்களையும், செற்றஞான்று - எரித்த நாளில், உய்ந்த மூவரில் - சாவாது பிழைத்த மூவர்களில், இருவர் - இரண்டு பேர், நின் திருக்கோயிலின் வாய்தல் - தேவரீரது திருக்கோயிலின் திருவாயிலில், காவலாளர் என்று - வாயிற்காப்பாளரென்று, ஏவிய பின்னை - நியமித்த பிற்பாடு, ஒருவன் - மற்றொருவன், நீ - தேவரீர், கரிகாடு அரங்காக - கருநிறமுள்ள சுடுகாடே திருவம்பலமாக, மானை நோக்கி - உமாதேவியாரைப் பார்த்து, மகிழ - அவர் மகிழுமாறு செய்யும், ஓர் மாநடம் - ஒப்பற்ற பெரிய திருக்கூத்தில், மணிமுழா முழக்க - அழகாகிய முழவு வாத்தியத்தை முழக்கும்படி, அருள் செய்த - இரங்கியருளிய, தேவதேவ - தேவ தேவரே, செழும்பொழில் - செழுமிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, திகைப்பு ஒன்று இன்றி - மயங்குதல் சிறிது மில்லாமல், நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

9. **அறிவி னான்மிக்க அறுவகைச் சமயம்**
**அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து**
**எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்**
**துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்**
**குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்**
**கோல வாளொடு நாளது கொடுத்த**
**செறிவு கண்டுநின் திருவடி அடைந்தேன்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.**

(ப-ரை) அறிவினால் மிக்க - மெய்யறிவினால் மேம்பட்ட, அறுவகை சமயம் - அறுவகைச் சமயங்களிலும், அவ் வவர்க்கு - அவ்வச் சமயங்களை யுடையவர்க்கு, அங்கே - அவ்வச் சமயத்தே, ஆர் ஆருள் புரிந்து - அரிய திருவருளைச் செய்து, எறியும் மா கடல் - அலை யெறிகின்ற பெரிய கடல் சூழ்ந்த, இலங்கையர்கோனை - இலங்கையர்க்கரசனான இராவணனை, துலங்க - நடுங்குமாறு, மால் வரைகீழ் - பெரிய கைலாய மலையின் கீழ், அடர்த்திட்டு - நசுக்கி, குறிகொள் - இரங்கியருளல் வேண்டு மென்னும் குறிப்பினையுடைய, இன்னிசையின் - இனிய இசையோடு கூடிய, பாடல் கேட்டு - பாட்டினைக் கேட்டு, கோலம் - அழகிய, வாள் ஒடு நாள் அது கொடுத்த - வாளோடு ஆயுளையும் கொடுத்தருளிய, செறிவு கண்டு - திவருட் செய்தியைப் பார்த்து, செழும்பொழில் - செழுமிய சோலை சூழ்ந்த, திருப்புன்கூருளானே - திருப்புன்கூரில் எழுந்தருளியவரே, நின் திருவடி - தேவரீரது திருவடியை, அடைந்தேன் - வந்து சேர்ந்தேன் என்றவாறு.

10. **கம்ப மால்களிற் றின்னுரி யானைக்**
**காமற் காய்ந்ததொர் கண்ணுடை யானைச்**
**செம்பொ னேயொக்கும் திருவுரு வானைச்**
**செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானை**
**உம்பர் ஆளியை உமையவள் கோனை**
**ஊரன் வன்தொண்டன் உள்ளத் தாலுகந்து**
**அன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ**
**டைந்தும் வல்லவர் அருவினை இலரே.**

(ப-ரை) கம்பம் - அசைதலையுடைய, மால்களிற்றின் - மதமயக்கத்தையுடைய யானையினது, உரியானை - தோலையுடையவனை, காமன் காய்ந்தது - மாரவேளை எரித்ததாகிய, ஓர் கண் உடையானை - ஒப்பற்ற நெற்றிக்கண்ணை யுடையவனை, செம்பொன் ஏ ஒக்கும் - செந்நிறத்தையுடைய பொன்னையே ஒப்பாகின்ற, திருவுருவானை - திருமேனி யுடையானை, செழும்பொழில் - செழுமிய சோலை சூழ்ந்த, திருப்புன் கூருளானை - திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ளவரை, உம்பர் ஆளியை - தேவர்களிற் சிறந்தவனை, உமையவள் கோனை - உமாதேவியாரின் தலைவனை, ஊரன் வன்தொண்டன் - ஊரனாகிய வன்றொண்டன், உள்ளத்தால் உகந்து - மனத்தால் விருப்பங்கொண்டு, அன்பினால் சொன்ன - அன்பினால் உரைத்த, அரும் தமிழ் - அருமையாகிய தமிழ்ப் பாட்டுக்கள், ஐந்து ஓடு ஐந்தும் - பத்தும், வல்லவர் - கற்று ஓதவல்லவர்கள், அருவினை இலர் - நீங்குதற்கரிய வினைகளை இல்லாதவராவர் என்றவாறு.

சென்ற இதழின் தொடர்ச்சி. உ சிவமயம்

# சைவசமயம்
# மாணவர் அறிவுப் பெட்டகம்
## (வினா விடை)

**78. மாயை பயன்படும்வகையில் எத்தனை வகைப்படும்?**

மூன்றுவகைப்படும்

i) சுத்தமாயை (விந்து, குண்டலினி, குடினி, ஊர்த்துவமாயை, மாமாயை)

ii) அசுத்தமாயை (அதோமாயை, மான், மோகினி)

iii) சுத்தாசுத்தமாயை

**79. சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயைகளிலிருந்து தோன்றும் தத்துவங்கள் எவை?**

| | |
|---|---|
| சுத்தமாயை | - சிவதத்துவங்கள் 5. (சிவம்(நாதம்), சக்தி(விந்து), சாதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை.) |
| அசுத்தமாயை | - வித்தியாதத்துவங்கள் 7. (காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை - மூலப்பிரகிருதி.) |
| சுத்தாசுத்தமாயை (பிரகிருதிமாயை அசுத்தமாயையின் தூலப்பரிமாணம்) | ஆன்மதத்துவங்கள் 24. (ஞானேந்திரியங்கள் 5, கன்மேந்திரியங்கள் 5, தன்மாத்திரைகள் 5, ஐம்பூதங்கள் 5, அந்தக்கரணங்கள் 4.) |

**80. அந்தக்கரணங்கள் (உட்கருவிகள்) நான்கும் எவை?**

மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

**81. ஞானேந்திரியங்கள் (ஐம்பொறிகள்) அறிகருவிகள்/ புறக்கருவிகள் ஐந்தும் எவை?**

மெய், வாய், கண், மூக்கு, செவி.

**82. கன்மேந்திரியங்கள் (செயற்கருவிகள்) ஐந்தும் எவை?**

கால், கை, நா (வாய்), எருவாய், கருவாய்.

(பாதம், பாணி, வாக்கு, பாயு, உபத்தம்)

**83. தன்மாத்திரைகள் (ஐம்புலன்கள்) ஐந்தும் எவை?**

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். (சத்த, பரிச, ரூப, ரச, கந்தம்.)

**84. ஐம்பூதங்கள் (பஞ்சபூதங்கள்) எவை?**

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம். (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்)

**85. முக்குணங்கள் எவை?**

சாத்வீகம், இராசதம், தாமதம்.

**86. பஞ்சகௌவியங்கள் எவை?**
பால், தயிர், நெய், கோசலம், கோமயம்.

**87. நடராசவடிவ தத்துவத்தை விளக்கும் உண்மை விளக்கப்பாடல் யாது?**
"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நன்ற மலர்ப்பதத்தே நாடு"

**88. வரலட்சுமி விரதம் எப்போ, யாரால், எவ்வாறு அனுட்டிக்கப்படுகிறது?**
ஆவணிமாதப் பூரணைக்கு முந்திய வெள்ளிக்கிழமையில், பெண்கள் குறிப்பாகச் சுமங்கலிப் பெண்கள் கணவனுக்கு நீண்ட ஆயுள் வேண்டியும், குழந்தைகள் வேண்டியும், அட்டஐஸ்வரியம் வேண்டியும், மஞ்சளில் தோய்ந்த ஒன்பது நூலிழைகளை முறுக்கி எடுத்து முடிந்த ஒன்பது முடிச்சுக்காப்பைக் கும்பத்தில் வைத்துப் பூசைமுடிவில் காப்பை வலக்கையில் கட்டிக்கொள்ளவர். நெய்ச்சாதம் விசேடநைவேத்தியம் படைத்தலும், அறுகம்புல் விசேட அர்ச்சனைப் பொருளாகவும் இடம்பெறும். இவ்விரதத்திற்கு உபவாசம், விதி இல்லை. இவ்விரதத்தைக் குலப்பண்டிகை என்பர்.

**89. மரணக் கிரியைகையிலே உள்ள மூன்று பகுதிகளும எவை?**
1) பேரிகை அடித்தல்.
2) சரீரத்தைச் சுத்தி செய்தல்.
3) அபிசேகம், சிவாக்கினியால் சுடுதல்.

**90. ஒருவர் இறந்தபின் பூதவுடலுக்குக் கிரியை செய்யவேண்டியவர்கள் யாவர்?**

தந்தைக்கு மூத்த மகனும், தாய்க்கு இளைய மகனும், பிள்ளைகள் இல்லாதவிடத்து உறவினர்களும் கிரியை செய்யலாம்.

**91. சபிண்டீகரணக் கிரியைகள் என்றால் என்ன?**
அரிசிமா, எள், உழுந்துமா, தேன், பழம், சக்கரை போன்ற பொருட்களை ஏழு உருண்டைகளாக்கிப் பிண்டமிட்டு அவற்றைச் சேர்த்து, இறந்தவர்களைப் பிதிர்த் தேவர்களோடு சேர்க்குமுகமாகச் செய்யப்படுவது சபிண்டீகரணமாகும். மாத்ருபிண்டம் - 3. பிதிர்பிண்டம் - 3. நிமித்தரபிண்டம் - 1 என ஏழு பிண்டங்கள் அமைப்பது சபிண்டீகரணமாகும்.

**92. தோத்திரப்பாடல்கள் என்றால் என்ன?**
பன்னிரு திருமுறைகள் தொகுக்கப்பட்ட பின்னர் பாடப்பட்ட அருட்பாடல்கள் தோத்திரப்பாடல்களாகும்.

**93. அருணகிரிநாதர் அருளிச் செய்த நூல்கள் எவை?**
கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவெழுகூற்றிருக்கை, கந்தரந்தாதி, திருப்புகழ், திருவகுப்பு, வேல்விருத்தம், மயில்விருத்தம், சேவல்விருத்தம் ஆகிய ஒன்பது நூல்களை அருளிச் செய்துள்ளார்.

**94. தந்தரனுபூதியையும், கந்தரலங்காரத்தையும் அருணகிரிநாதர் எவ்வடிவில் இருந்து அருளிச் செய்தார்.**
தேவலோகம் சென்று மீண்டபோது தனது உடல் தகனம் செய்யப்பட்டமையினால் திருத்தணிகையில் கிளி வடிவிலிருந்து இவற்றைச் செய்தருளினார்.

**95. திருப்புகழின் சிறப்புக்கள் யாவை?**
"முத்தைத்தரு பத்தித்திருநகை" என்று முருகன் அடியெடுத்துக் கொடுத்துப் பாடப்பட்ட நூல்.
"வாக்கிற்கு அருணகிரி" என்ற சிறப்பைக் கொடுத்த நூல்.
ஆழ்ந்த பொருளமைதி, தடையற்ற நடை, தாளக்கட்டு, இசையின்பம் நிறைந்த நூல்.
1088 க்கும் மேற்பட்ட சந்த வேறுபாடுகளைக் கொண்ட நூல்.

**96. திருப்புகழில் எத்தனை செய்யுள்கள் உள்ளன?**
பதினாறாயிரம் எனக் கணக்கிடப்பட்டாலும், எமக்குக் கிடைத்த பாசுரங்கள் 1231 மட்டுமே.

**97. பின்வரும் திருப்புகழ் பாடல்களின் இராக, தாளங்களைத் தருக?**
**1) உம்பர்தரு தேனுமணி 2) பாதிமதி நதி**

| பாடல் | இராகம் | தாளம் |
|---|---|---|
| 1) உம்பர்தரு தேனுமணி | ஹம்ஸத்வனி, ஆனந்தபைரவி | அங்கதாளம் |
| 2) பாதிமதி நதி | காபி | மிஸ்ரசாபு |

**98. நாலாயிரத்திவ்விய பிரபந்தம் யாரால் பாடப்பட்டது? இதைத் தொகுத்தவர் பெயர் என்ன?**
பன்னிரண்டு ஆழ்வார்களால் பாடப்பட்டது.
தொகுத்தவர் ஸ்ரீமத் நாதமுனி என்பவர்.

**99. பிரபந்தம் என்றால் என்ன? இதன் மறு பெயர் என்ன?**
பிரபந்தம் என்பது தொகுப்பு அல்லது தனி நூல்
மறுபெயர் - திராவிட வேதம்

**100. "பச்சைமாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கண்" உடையவர் யார்? இவ்வாறு பாடியவர் யார்?**
திருமால். தொண்டரடிப்பொடியாழ்வார், தான் அருளிச்செய்த திருமாலைப் போற்றிபாடும் 873ஆவது பாசுரம்.

**101. அபிராமியந்தாதி யாரால், யாரைப்பற்றிப் பாடப்பட்ட நூல்?**
அபிராமிப்பட்டரால், அபிராமி அன்னையைப் போற்றிப் பாடப்பட்ட நூல்.

**102. i) அபிராமி அந்தாதி எத்தனை பாடல்களைக் கொண்டது?**
**ii) அந்தாதி என்பது எவ்வாறு அமைகிறது?**
i) நூறு பாடல்களைக் கொண்டது.
ii) ஒரு பாடலின் முடிவு(அந்த)ச் சொல் அடுத்த பாடலின் தொடக்கமாக(ஆதியாக) அமைவது அந்தாதியாகும்.

**103. சகல சௌபாக்கியங்களும் கிடைக்க ஓதவேண்டிய அபிராமிப்பட்டரின் பாடல் எது?**

**"தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா**
**மனந்தரும் தெய்வவடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனந்தரும் நல்லனவெல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே."** (60)

**104. சமயகுரவர் பெயர்களைத்தந்து அவர்கள் அருளிச்செய்த பாடல்கள் இடம் பெற்ற திருமுறைகளையும் தருக?**

| **சமயகுரவர்கள்** | **அருளிய பாடல்கள்** | **திருமுறை** |
|---|---|---|
| சம்பந்தர் | தேவாரங்கள் - திருக்கடைக்காப்பு | முதல் 3 திருமுறைகள். |
| அப்பர் | தேவாரங்கள் - தேவாரம் | 4,5,6ஆம் திருமுறைகள். |
| சுந்தரர் | தேவாரங்கள் - திருப்பாட்டு | 7ஆம் திருமுறைகள். |
| மாணிக்கவாசகர் | திருவாசகம், திருக்கோவையார் | 8ஆம் திருமுறைகள் |

**105. தேவாரம் பாடிய சமயகுரவர்களும் அவர்கள் பாடியருளிய திருமுறைப்பாடல்களும் எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன.**
தேவார முதலிகள். அடங்கன் முறை.

**106. சந்தான குரவர்களின் பெயர்களையும், அவர்கள் அருளிச் செய்த நூல்களின் பெயர்களையும் தருக?**

| **சந்தான குரவர்கள்** | **அருளிச்செய்த நூல்கள்** |
|---|---|
| மெய்கண்டதேவர் | சிவஞானபோதம். |
| அருணந்திதேவர் | சிவஞானசித்தியார், இருபாவிருப∴து. |
| மறைஞானசம்பந்தர் | நூலேதும் இயற்றவில்லை என கருதப்படுகிறது. |
| உமாபதிசிவாசாரியார் | சித்தாந்த அட்டகங்கள். |

தொடரும்..

சைவப்புலவர், சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்,
தர்மாசிரியர். சாமித்தம்பி பொன்னுத்துரை B.A. (சிறப்பு), M.A.

# ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம்

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 17-08-2018 | வெள்ளி | மாதப் பிறப்பு. |
| 05 | 21.08.2018 | செவ்வாய் | ஆவணி மூலம். |
| 07 | 23.08.2018 | வியாழன் | பிரதோஷ விரதம். |
| 09 | 25.08.2018 | சனி | நடேசர் அபிஷேகம். |
| 10 | 26.08.2018 | ஞாயிறு | பூரணை விரதம். |
| 14 | 30.08.2018 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி விரதம். |
| 17 | 02.09.2018 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| 22 | 07.09.2018 | வெள்ளி | பிரதோஷ விரதம்,<br>செருத்துணை நாயனார் குருபூசை,<br>புகழ்த்துணை நாயனார் குருபூசை,<br>அதிபத்த நாயனார் குருபூசை. |
| 23 | 08.09.2018 | சனி | இளையான்குடிமாற நாயனார் குருபூசை. |
| 24 | 09.09.2018 | ஞாயிறு | அமாவாசை விரதம். |
| 25 | 10.09.2018 | திங்கள் | மறைஞானசம்பந்தர் குருபூசை. |
| 28 | 13.09.2018 | வியாழன் | விநாயக சதுர்த்தி விரதம் |
| 30 | 15.09.2018 | சனி | ஷஷ்டி விரதம்,<br>குலச்சிறை நாயனார் குருபூசை. |

# பன்னிரு திருமுறை முற்றோதல்

19.04.2018 தொடக்கம் 28.04.2018 வரை












# அமுதவிழா

கலாபூஷணம், சைவப்புலவர்

சு. செல்லத்துரை அவர்களின்

அகவை 80

08.04.2018







## திருவாசகப் பெருவிழா

2017.12.17, முன்னேச்சரம்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மடம்.



















## யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

2018.06.08

சைவசித்தாந்தம் முதுகலைமாணி பட்டம்




இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால் Sharp Graphics (Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.